# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520

இருமாதத்திற்கொருமுறை

ஜூலை - ஆகஸ்ட் 2025

ஆண்டு 6 ▲ இதழ் 1

விலை 250/-



இத்துடன் இணைப்பு

**உள்ளே....**

**சிக்குன்குனியா காய்ச்சலும் அதற்கான நிவாரணமும்**

'அரும்பு ' புகழ் ஆசிரியர்

## ஹாபிஸ் இஸ்ஸதீன்

# முத்தமிழ் கலசம்



பிரதம ஆசிரியர்
**சித்தி வஃபீரா**

சிறப்பாசிரியர்
**தமிழ்நெஞ்சம் அமின்**
பிரான்சு



## ஆசிரியர் குழு



**Dr. ஜலீலா முஸம்மில் (MBBS/SL)**
வைத்திய அதிகாரி
(எழுத்தாளர் கவிஞர் நூலாசிரியை)
ஆதார வைத்தியசாலை, ஏறாவூர்.



**எஸ்.யூ.கமர்ஜான்பீபீ (J.P)**
தேசபந்து .லங்கா புத்ர.
(எழுத்தாளர் கவிஞர் நூலாசிரியை)
(Diploma in Psychology)



**R.J. பிரகலாதன்**
(பொது சுகாதார பரிசோதகர்)
பண்டத்தரிப்பு
யாழ்ப்பாணம்.



**நிலு**
பண்டாரவளை
(ஆசிரியை கஹகொல்ல
அல்.பத்ரியா மு.ம.வித்தியாலயம்)



**மின்னத் ஸரா பரூஸ்**
(அல்-ஹாபிழா,
அல்- காரியா மௌலவியா)

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜுலை - ஆகஸ்ட் 2025

ஆண்டு 6 ▲ இதழ் 1



பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா

Chief Editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்

Hon. editor : Tamilnenjam Amine

ஆசிரியர் குழு :

Dr. ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ, ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன், மின்னத் ஸரா பரூஸ்

வடிவமைப்பு:

Omardeen Aysha Shakeela



படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.



படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

email :

muththamizh.kalasam@gmail.com

The Editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka


# காலத்தின் பிடியில்..

யார் மீதும்
எதன் மீதும்
புகார் எதுவுமில்லை
ஒப்புக் கொடுத்துவிட்ட
வாழ்க்கையில்
துன்பத்திற்கும்
வெறுப்பிற்கும் இடமில்லை..
நூலைத் தன் கையில்
பிடித்திருக்கும் பெருமையில்
எங்கெங்கோ பறக்கவிட்டு
வேடிக்கை பார்ப்பது யார்?
காற்றடிக்கும் திசையெல்லாம்
தொடர்ந்து கொண்டேயிருக்கும்
பயணத்தின் நீட்சி..
நூல் பிடித்த கை
விடுவித்த தருணம்
இருக்கும் இடத்தில்
ஒன்றுமில்லாத
விலாசமற்றுப் போகும்
வாழ்க்கையில்..
தானென்ற போதையில்
தடுமாறி நிற்கும்
மனித மனத்தின்
வெகுளித்தனத்தில்
எப்போதும் சிரித்துக் கொண்டே
யாருக்காகவோ
ஓடிக் கொண்டே
இயல்பாய் இருக்கிறது காலம்:

**புதுகை ஆதீரா:**

எழுதுகோலின் கூர்முனை கொண்டு
நல்லவை விதைப்போம். அல்லவை புதைப்போம்

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகத் தோழமைகளுக்கு வணக்கம்! (அஸ்ஸலாமு அலைக்கும்)

வழமை போன்றே இரண்டு மாதங்களின் பின் இவ்விதழும், உங்கள் இரசனைக்கேற்ப ஆக்கங்களை சுமந்து வந்திருக்கிறது. ஒவ்வொரு இதழிலும், நேர்மறை சிந்தனையை ஊக்குவித்து, சமூக மாற்றத்துக்கான ஏதாவதொரு சிறிய முயற்சியையாவது முன்னெடுக்க விழைகிறோம். நீங்களும் உங்கள் எழுதுகோலை, அதற்கான தூண்டுகோலாய் ஆக்குங்கள்! நம் சமூகத்தைக் கட்டமைத்து சீராக வழிநடத்த, எம் எழுத்தாணியை ஆயுதமாக்குவோம்.

உலகத்தின் எந்த மூலையாக இருந்தாலென்ன, குரூர எண்ணம் கொண்ட, சக மனிதரை துன்புறுத்தி உயிரை எடுக்கும் சில மனித மிருகங்களின் மத்தியில் தான் ஏனையோர் வாழவேண்டியுள்ளது. இதுபோன்ற பகுத்தறிவில்லாத, வக்கிர புத்தி கொண்டவர்களால் முழு சமுதாயமே தலை குனிய வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இன்னும் எத்தனை காலத்துக்கு நீடிக்குமோ? தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கெதிராக பேசாமல் மௌனம் காத்து, தற் கொலையைத் தீர்வாக எடுக்க நினைக்கும் ரிதன்யாக்களுக்கு ஒரு வார்த்தை, கண நேரத்தில் முடிவெடுத்து உயிரை விடத் துணியும் சந்தர்ப்பத்தில் சற்று பகுத்தறிவைப் பயன்படுத்தி, எதிர்த்துப் போராடி வாழ்ந்துதான் பாருங்களேன் கொஞ்சம்! உங்களைச் சுற்றிலும் அழகானதோர் சூழலைக் காண்பீர்கள்.உங்கள் வாழ்க்கை உங்கள் கையில் இருப்பதையும் உணர்வீர்கள்.

அத்துடன் உலகில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்திய யுத்தமானது மீண்டும் தனது கோரமுகத்தைக் காட்டத் தொடங்கியுள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்ற முடியா மனித உரிமை மீறல்களுடன், மொத்த உலகின் பார்வையை ஒருமுகமாகத் திருப்பியிருக்கும் யுத்தங்கள் மனிதநேயங் கொண்ட அனைவரையும் பதற்றம்கொள்ள வைத்திருப்பது வேதனையே! யுத்த நிறுத்தங்கள் அறிவிக்கப்பட்டிருந்தாலுமே, அவை மனிதாபிமானமற்ற நிலையில் மீறப்படுவதும், அழிவுகளை ஏற்படுத்துவதும் மக்களைப் பீதி கொள்ள வைத்திருக்கிறதென்பதும் மறுக்கவியலா உண்மையே! அனைவரும் நம்மைப் போன்றே இரத்தமும் தசையும் கொண்ட உயிர்கள் என்ற உணர்வு மட்டும் அனைவருக்கும் இருந்தால் போதும்.சக மனிதனை மதிக்கும் பண்பும், நேசமும் தானாகவே ஏற்படும். உலகம் சீராக இயங்க தனிமனித ஒழுக்கமே பிரதானம். இதுவே சிறந்த சமூகக் கட்டமைப்புக்கு வழிகோலும்.

எம் சஞ்சிகையை வாசிப்பதோடு நின்றுவிடாமல் உங்கள் கருத்துக் களையும், புதிய ஆலோசனைகளையும் எம்முடன் பகிர்ந்து எம் வளர்ச் சிக்குத் தோள் கொடுங்கள்! ஆரோக்கியமான சிந்தனை கொண்டோர் வாழும் அமைதியான உலகம் நம் வசமாகட்டும்.

நன்றி!

எஸ். வஃபீரா
பிரதம ஆசிரியர்



# பூமுகம்

எஸ்.பாயிஸா அலி - கிண்ணியா

அடிவானைக் கடல் முத்தமிடும்
அக்கரையின்
நடுப் புள்ளியிலிருந்தும்
மெல்ல மேலெழுகிறது
கதிர் விரியாத சூரியன்

என்றைக்கும் போன்ற
நோன்பு மாதத்தின்
சஹர் பிந்திய பனிக்காலை.

நாளின் இயல்பான
பணிகள் தொடங்க
ஏனோ இன்று உடலோடு
ஒத்துழைக்க மறுக்கிறது மனசு.

இலேசான தலைவலியைக்
குறைக்க இஃப்தார் வரைக்கும்
இனிப் பரசிற்றமோல் தேட முடியாது.

இன்றைய வாசிப்பிற்கென
தபால் தந்த சஞ்சிகையை
மறுபடியும் எடுத்த இடத்திலேயே
தரிக்கச் செய்கிறேன்.

கண்களை மெலிதாய் மூடி
மறுபடியும் அரைமணி நேரமாவது
போர்வைக்குள் சுருள வேண்டும்.

இரவு மாற்றிய
தலையணைஉறைகளின்
மெலிதான கொம்ஃபோர்ட் வாசனை
மனசை சாந்தப்படுத்த முனைகிறது.

அலைபேசியை அருகிழுத்து
உள்ளார்ந்த முணுமுணுப்பாய்
ஷேக் மிஷாரி ரஷீத் அல்
அஃபாஸியிடம் சூரா ரஹ்மானை
எனக்காக இன்னொருமுறை
ஓத முடியாதா என்கிறேன்

சிலவேளை அவரொரு
பாடகராகவும் இருந்திருக்கக்கூடும்
போல...

மிகை தனித்துவமும்..
தெளிவினிமையும்..
செறிந்த ஆன்மீகமுமாய்
பத்தி மணமெனப்பரவும்
மந்திரக்குரல் 'அர்ரஹ்மான்... '
என உச்சரிக்க தொடங்குகிறது ...

ஆன்மீகம் கிளை பிரிய எந்தவித
முன் திட்டமிடலுமின்றி
நினைபரப்பின் ஓரமாய்
மெல்ல மேலெழுகிறது உன் பூமுகம்.

அமைதியுறத் தொடங்கிய
ஆன்மாவிற்குள்ளிருந்துமோர்
நனவிலிக் குரல்
செவிப்பறை தாண்டி
உயிரை
மெல்லமாய் அதிர்த்திற்று
'அர்ரஹ்மான் ..
யாவருக்குமானஅன்பாளன்...'



-சிறுகதை-

# பூனைக்குட்டியும் காதலும்

இளங்காலைப் பொழுதின் பனிப்பொழிவு உடலுக்குக் குளிர்ச்சியைத் தந்தாலும் உள்ளத்துக்கு மகிழ்ச்சியைத் தந்தது. தென்றலுக்குத் தோட்டத்திலிருந்து வந்த இதமான வாசம் நாசித்துவாரத்தின் உள்ளே நுழைந்து மனதை மயக்கியது. தோட்டத்தில் பூத்திருந்த மகிழம்பூவின் நறுமணமும் பன்னீர்ப் பூக்களின் நறுமணமும் மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தன. காலையின் அழகு தென்றலுக்கு மிகவும் பிடித்தமான ஒன்று.

வீட்டினுள் படுத்திருந்த இனியனுக்கு இருபத்தெட்டு வயதிருக்கும். குளிருக்கு இதமாகப் போர்வையை நன்றாகப் போர்த்தியிருந்தவனின் முகம் கம்பீரமாக அரும்பு மீசையுடன் அமைதியைப் போர்த்தியிருந்தது. நெற்றியில் படர்ந்திருந்த முடிக்கற்றைகள் கத்தையாக காற்றுக்கு அசைந்து கொண்டிருந்தன. அதிகாலையின் இனிய கனவில் அவன் முகம் பல்வேறு உணர்ச்சிகளை வெளியிட்டுக் கொண்டிருந்தது. தோட்டத்திலிருந்து வீட்டுக்குள்

நுழைந்து அவன் முகத்தைப் பார்த்த தென்றலுக்குத் தன்னையும் அறியாமல் முறுவல் எட்டிப் பார்த்தது. ஒல்லியான தேகமும் இலட்சணமான முகமும் உடைய தென்றல், இனியனின் புன்னகை முகத்தை நோக்கிக் குனிந்து நெற்றியில் முத்தமிட்டாள். அவளின் இடையூறால் அசைந்த இனியன்,

'தென்றல் தூங்கும்போது எழுப்பாத. உனக்குத் தூக்கம் வரலைனா என்னை எழுப்புறியா' என்று முனகினான்.

'ம்... ஆமா. இந்தக் காலையின் அழகை ரசிக்காம உனக்கு என்ன தூக்கம்? எந்திரி. காலையில் தோட்டத்துல பூக்களும் பறவைகளும் எவ்வளவு மகிழ்ச்சியாயிருக்கு தெரியுமா?'

'அப்பாடி இந்தக் குளிரில் ஒரு நாளும் எனக்கு படுக்கைய விட்டு எந்திரிக்கப் பிடிக்காதுப்பா'

என்று சோம்பேறியாய் முடங்கிக் கொண்ட இனியனைக் கொஞ்ச நேரம் பார்த்து ரசித்தவள் அவன் தூக்கத்தைக் கலைக்காது தனது படிப்பறையின் பக்கம் பார்வையைத் திருப்பினாள்.

தென்றலுக்கும் இனியனுக்கும் திருமணமாகி ஓராண்டாகியிருந்தது. இருவருக்கும் நல்ல புரிதல் இருந்தது. ஒருவரின் எண்ணங்களை மற்றவர் புரிந்து விட்டுக் கொடுத்தும் நடப்பர். அதனால் எந்த விசயத்திலும் இருவருக்கும் கருத்து வேறுபாடு வந்ததில்லை. தென்றல் கோபமாக இருந்தால் இனியன் வலிய வந்து பேசுவதும் இனியன் கோபமாக இருந்தால் தென்றல் விட்டுக் கொடுப்பதும் வழக்கமாக இருந்தது. இருவரும் அழகான ஜோடிகள் என்று தெருவிலுள்ளோர் கூறுவதுண்டு.

தென்றல் இயல்பாகவே இனிமையான, மென்மையான சுபாவமுடையவள். அதனால்தான் திருமணத்திற்கு முன் கல்லூரியில் இனியனுக்கு அவளைப் பார்த்ததும் பிடித்துப் போயிற்று. அவளது மனதைப் போலவே நேர்த்தியான பெரிய கண்களும் சின்ன உதடுகளும் எடுப்பான மூக்கும் என எழிலான பெண். சாலையில் போவோர் ஒரு தடவை பார்த்தவர்கள் திரும்பவும் பார்க்க வைக்கும் அழகான முகம். கருங் குழல் அவளது அழகுக்குப் பேரழகு சேர்த்தது.

யாரையும் ஏறெடுத்துப் பார்க்காத தென்றலுக்கு இனியன் வலிய வந்து பேசும் போது, முதலில் கோபம் வந்தாலும் அவனது இனிய சுபாவங்களும் முகமும் மனதில் பதிய, தவிர்க்க முடியாது திண்டாடிப் போனாள். காதலான அவன் பார்வைகள் பரிமாறிய இன்பங்கள் அவளைத் தன்னை மறக்கச் செய்தன. யாரிடமும் மயங்காத தன் மனம் இனியனைப் பார்த்தால் மட்டும் மயங்கிப் போவது ஏன்? என நீண்ட காலம் யோசித்தாள். தன் மனமும் அவனை விரும்ப ஆரம்பிப்பதை உணர்ந்தவள் ஒரு கட்டத்தில் தன் காதலை, தன் தந்தையிடம் கூறினாள். முதலில் கோபப் பட்டவர் இனியனை அழைத்துப் பேசி, அவனது நேசத்தைப் புரிந்து கொண்டு திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார்.

இருவீட்டார் சம்மதத்துடன் எளிமையாக நடந்த திருமணம் தான் என்றாலும் இருவரின் மனப் பொருத்தமும் காண்போரை வியப்பிலாழ்த்தியது.

திருமணமான புதிதில் இனியன் அவள் மேல் காட்டிய காதலால் திக்குமுக்காடிப் போனாள் தென்றல். ஒரு மாதத்திற்குப் பின்னர் சின்ன, சின்ன கருத்து மோதல் வந்தால் தென்றல் விட்டுக் கொடுத்துப் போக ஆரம்பித்தாள். இனியன் தன் கோபம் தணிந்த பிறகு அவளிடம் மன்னிப்புக் கோர ஆரம்பித்தான். இந்தப் புரிதல் அவர்களிடையே ஒரு ஆழமான நேசத்தைத் திணித்தது.

இனியனுக்கு அவன் அம்மா என்றால் உயிர். அவர்கள் என்ன தவறு செய்தாலும் அவரைப் பற்றிக் குறை கூறினால் பிடிக்காது. இதைப் புரிந்த கொண்ட தென்றல் அவரது குறைகளையும் பேசாது தனது தாய் போல பார்க்க ஆரம்பித்தாள். இதனால் மாமியார், மரு மகளுக்கும் ஒத்துப் போனது. இனியனுக்கும் அவள் மேல் எல்லையற்ற காதலை உண்டு பண்ணியது.

இன்னொன்று தென்றலுக்கு பூனைக் குட்டிகள் என்றால் உயிர். அவற்றுக்குச் சாப்பாடு வைப்பதும் பால் வைப்பதும் எனக் குழந்தைகளைப் போல் பார்த்துக் கொள்வாள். ஆனால் அவள் மாமியாருக்குப் பூனைகள் என்றாலே பிடிக்காது. அவற்றைப் பார்த்தாலே 'சீ போ...போ..' என்று விரட்டி யடிப்பார். இதனால் இருவருக்கும் கருத்து வேறுபாடு வருவதுண்டு. தென்றல் 'பாவம் அது என்னத்தை பண்ணப் போகுது? அதப் போய் திட் டறீங்க?' என்பாள்.

'எனக்கு அதப்பாத்தாலே பிடிக்காது. சீ... எப்பப் பார்த்தாலும் திருடித் தின்னுகிட்டு' என்று முகத்தை வலித்தவரைப் பார்த்து விட்டு,

'அத்தை மத்தவங்க பொருளைத் திருடறது, வஞ்சகமாக அபகரிக்கிறது மனுசங்க செய்ற வேலை. பாவம் அது சாப்பாட்டுக்கு வழியில்லாமத் தான நம்ம கால சுத்திச் சுத்தி வருது. வாயில்லாத அந்த ஜீவன்களுக்குச் செய்யறதால குறைஞ்சு போய்ட மாட்டோம்' என்று சொன்ன மருமகளின் கருத்துகள் பிடிக்கா விட்டாலும் அதை மறுத்துச் சொல்ல முடியவில்லை மரகதம் அம்மாவால்.

கொஞ்ச காலம் போகப் போக தென்றல் பால் வைப்பதையும் சாப்பாடு வைப்பதையும் ரசிக்காதவர் பூனை வரும் போது அவள் இல்லா விட்டால், அவர் காலைச் சுற்றி வர ஆரம்பித்தது. வேறு வழியில்லாமல் பால் சோறு வைக்க ஆரம்பித்தார். நாளடைவில் பூனை வரா விட்டால் அவருக்குத் தனது பிள்ளையைப் பார்க்காதது போல் அதுக்கு எதுவும் ஆயிருக்குமோ என்ற பதட்டம் வர ஆரம்பித்தது.

நான்கு நாட்கள் கழித்து வந்த சின்னுவின் உடல் தளர்ந்திருந்ததைப் பார்த்த மரகதம் அம்மாளுக்கு அந்தப் பெண் பூனையான சின்னு குட்டிகள் ஈன்றிருப்பது தெரியவந்தது. தென்றல் தான் தன் வீட்டு மொட்டை

மாடியில் துணிகாயப் போடப் போனவள் சின்னு தண்ணி டிரம்மின் மறைவிலிருந்து கத்தியதையும் கூடவே குட்டிகளின் கூக் குரலையும் கேட்டுப் பக்கத்தில் போய் பார்த்தவள் சின்னு நாலு குட்டிகளை ஈன்றிருப்பதையும்நான்கும்பாலுக்குக் கத்துவதையும் பார்த்தாள். நான்கு குட்டிகளில் ஒன்று வெள்ளையாகவும் ஒன்று லேசான மஞ்சள் நிறத்துடனும் மற்றொன்று சாம்பல் நிறத்துடனும் இன்னு மொன்று கருப்பு வெள்ளை நிறத்துடன் பஞ்சுப் பொதியாய் இருப்பதைக் கண்டவுடன் கருப்பு, வெள்ளை கலந்த பூனைக் குட்டியைக் கைகளில் தூக்கினாள். பஞ்சுப் பொதியாய் மிகுந்த அழகுடன் பளபளத்த அதன் வட்டக் கண்களும் முக அழகும் அவள் கண்களைக் கொள்ளை கொண்டன. அவள் கைகளில் தூக்கியதும் பயந்த பூனைக்குட்டி 'மியாவ்' 'மியாவ்' என்று கத்த அதை அதன் தாயிடமே ஒப்படைத்துக் கீழே வந்தவள்,

'அத்தே மாடில நம்ம சின்னு குட்டி போட்டிருக்கு. வாறிங்களா பார்ப்போம்' என்றவுடன்,

'அப்படியா. சின்னு குட்டி போடற அளவுக்குப் பெரிய ஆளாயிடுச்சா. நினச்சேன் அது வயிறு ஏதோ பெருசா இருக்கேன்னு' என்ற படி ஆவலுடன் மாடிப் படியேறி வந்து சின்னுவின் குட்டிகளைப் பார்த்து ஆச்சரியப்பட்டுப் போனார். அந்தக் குட்டிகளின் அழகு அவரைக் கொள்ளை கொண்டது.

இப்படியாக மரகதம் அம்மாளின் பூனைப் பாசம் அதிகரிக்கையில் இரவு வேளையில் பூனைக் குட்டிகள் பாலுக்குக் கத்த ஆரம்பிக்க, அது அவரின் தூக்கத்தைக் கலைத்தது. மறு நாள் தனது மகனைக் கூப்பிட்டு,


'இனியன் இந்த பூனைக் குட்டிகளைக் கொண்டுபோய் நம்ம தோட்டத்து வீட்டில் தாய்ப் பூனையோடு விட்டு வா. நம்ம வேலைக்காரன் ராமசாமியைப் பார்த்துக் கொள்ளச் சொல். அது கொஞ்சம் வளர்ந்தவுடன் தென்றலுக்கு வேணும்னா தூக்கி வரலாம்' என்றார்.

இந்த முடிவு தென்றலுக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் கொடுத்தது. இருப்பினும் பூனைக் குட்டிகள் அமைதியாகவும் பாதுகாப்பாகவும் இருக்க தோட்டத்து வீடு சரியான இடம் தான் என நினைத்துக்கொண்டாள். பூனைக்குட்டியைப் பார்க்க வேண்டும் எனத்தோணுகிறபோதுஇனியனோடு போய் வாரம் ஒரு முறை பார்த்து வருவாள். இப்படியாக பூனைக் குட்டிகள் மீதான தென்றலின் காதல் ஆறவேயில்லை.

(முற்றும்)



**சுந்தரி மணியன்** - புதூர்



# நான்யார் இவ்வுலகில்?

இந்த உலகு இறைவன் அருளால்
இயங்க நான்யாரோ?
பந்தம் கொண்டு பரிவாய்ப் பேச
பலரும் வருகின்றார்
சொந்தம் போல சுற்றி நின்று
சுகமா என்கின்றார்
வந்து பார்த்தால் வகையாய் மாட்டும்
மனத்தில் நினைக்கின்றார்

என்ன உலகம் இதுதான் என்றே
எனக்குள் நினைக்கின்றேன்
சின்னப் பிள்ளை போல நானும்
சிரித்துக் மகிழ்கின்றேன்
மின்னும் வேசம் மிரட்ட ஓடி
வந்தே ஒளிகின்றேன்
இன்னும் ஏனோ இங்கே தயக்கம்?
இறைவா கேட்கின்றேன்...

பாசம் வைத்தால் பாவம் பார்த்தால்
பழியாய்க் கிடக்கின்றார்
நேசம் என்னுள் நிறைய இருந்தும்
நெஞ்சை மிதிக்கின்றார்
காசு கேட்டு கழுத்தைப் பிடிக்கக்
கவலை கொள்கின்றேன்
பேசும் பேச்சோ பிரியம் இன்றிப்
பிழையாய்த் தொடர்கிறதே

தேடிப் பார்த்தும் தினமும் இங்கே
திருப்திக் கிடைப்பதில்லை
வாடும் மனத்தின் வாழ்க்கைப்
பாதை வகையாய் இருக்கவில்லை
மேடு பள்ளம் மிகவும் தாக்க
மேலும் பிடிப்பதில்லை
காடும் வீடும் கவலை கொள்ள
கவனம் நிலைப்பதில்லை

**தமிழ்நெஞ்சம் அமின்**
**பிரான்ஸ்**

மருத்துவக் கட்டுரை



# சிக்குன்குனியா காய்ச்சலும் அதற்கான நிவாரணமும்



**Dr. ஜலீலா முஸம்மில் MBBS SL**
சிரேஷ்ட வைத்திய அதிகாரி
ஆதார வைத்தியசாலை - ஏறாவூர்

**த**ற்காலத்தில் அதிகமாக மக்களிடையே பேசப்பட்டு வருகின்ற ஒரு நோய் சிக்குன் குனியா காய்ச்சல். பல்வேறு குணங்குறிகள் கொண்ட சிக்குன்குனியா நுளம்புகளால் பரவும் ஒரு வைரஸ் காய்ச்சலாகும், இது உடல் மூட்டுகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி அதீத வலியை உண்டாக்குகிறது

இலங்கையில் சிக்குன்குனியா (Chikungunya) வேகமாகப் பரவி வருவதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். நாடு முழுவதும் சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்து வருவதால், அதன் அறிகுறிகள் குறித்து பொது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும்.

சிக்குன்குனியா என்பது முதன்மையாக ஏடிஸ் நுளம்புகளால் பரவும் ஒரு வைரஸ் தொற்று ஆகும். டெங்கு மற்றும் ஜிகா வைரஸ் தொற்றுகளைப் போன்றே சிக்குன் குனியாவை உண்டாக்கும் வைரஸும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. இது பொதுவாக ஆபத்து குறைந்தவை என்றாலும், இது




கடுமையான நிலைக்கும் இட்டுச் செல்லக் கூடியது.

சிக்குன்குனியா என்பது ஆபிரிக்க மொழியான 'மகோண்டீ' யில் (Makonde) இருந்து வந்தது. இந்தக் காய்ச்சல் வந்தவர்கள், பல்வேறு மூட்டுகளின் வலியால் அவதிப்பட்டு, வளைந்து சுருண்டு படுத்துக்கொள்வார்கள். சிக்குன் குனியா என்றால், அந்த மொழியில் 'வளைந்து விடுதல்' என்று பொருள். இந்தக் காய்ச்சலின் பாதிப்பு 1779-ல் தான் முதன் முதலில் ஏற் பட்டதாக மருத்துவ நிபுணர்கள் கருது கிறார்கள்.

## பரவல்

சிக்குன்குனியா நுளம்புகளால் பரவுகிறது, குறிப்பாக ஏடிஸ் ஈஜிப்டி மற்றும் ஏடிஸ் அல்போபிக்டஸ் இனங்கள். இந்த நுளம்புகள் ஏற் கனவே வைரஸால் பாதிக்கப்பட்ட ஒருவரைக் கடிக்கும் போது அவை கிருமித் தொற்றுக்கு உள்ளாக்கப் படுகின்றன. வைரஸைப் பெற்ற

பிறகு, அந்நுளம்புகள் மற்ற மனிதர்களுக்கு கடிக்கும் போது நோய் பரவுகிறது. இந்தக் காய்ச்சல் சிக்குன் குனியா (CHIK-V) வகை வைரஸ் வகையால் ஏற்படுகிறது. இந்த வைரஸில் இரண்டு உள்பிரிவுகள் உள்ளன. ஒன்று, ஆசிய பிரிவிலும், மற்றொன்று ஆபிரிக்கா பிரிவிலும் காணப்படுகிறது. இது ஒரு ஆர்.என்.ஏ. வைரஸ் வகை. டோகோ வைரஸ் குடும்பத்தைச் சேர்ந்த இந்த வைரஸ், ஆரம்பத்தில் தசைகளிலும் மூட்டுகளிலும் பெருகுவதால் தான் மனிதர் களுக்குப் பல்வேறு தொந்தரவுகளும் ஏற்படுகின்றன. இவை 60 முதல் 70 நானோ மீட்டர் அளவு கொண்டவை. கோள வடிவத்தில் காணப்படும். நுளம்பு கடித்த 3 முதல் 7 நாள்களுக்குள் நோயாளிக்கு சிக்குன்குனியா காய்ச் சல் ஏற் படும்.

**சிக்குன்குனியா அறிகுறிகள்**

**பொது அறிகுறிகள்**

சிக்குன்குனியாவின் அறிகுறிகள் பொதுவாக பாதிக்கப்பட்ட நுளம்பு கடித்த 4 முதல் 8 நாட்களுக்குப் பிறகு தோன்றும்.

***அதிக காய்ச்சல்:*** *அடிக்கடி திடீர் மற்றும் 102°F (39°C) வரை*

***மூட்டு வலி:*** *மூட்டுகளில், குறிப்பாக கைகள் மற்றும் கால்களில் கடுமையான வலி, இது மாதங்கள் அல்லது வருடங்கள் கூட நீடிக்கும்.*

***தசை வலி:*** *தசை வலிஅல்லது புண்.*

***கடி:*** *ஒரு சொறி இது அரிப்பு மற்றும் தண்டு மற்றும் மூட்டுகளில் தோன்றும்.*

***தலைவலி:*** *லேசானது முதல் கடுமையான தலைவலி.*

***களைப்பு:*** *மிகுந்த சோர்வு மற்றும் சோர்வு தொடர்ச்சியாக நீண்ட நாட்களுக்கு இருக்கும்*

காய்ச்சலோடு மூட்டுவலி, உடல் வலி, தலைவலி, மூட்டுகளில் வீக்கம் ஏற்படும். சிலருக்கு டெங்கு போல், தோல் சிவந்து போகலாம். சிலருக்கு வாந்தி, குமட்டல் ஏற்படலாம். பெரும்பாலும், ஒரு வாரத்தில் காய்ச்சல் சரியாகி விடும். ஆனால், மூட்டு வலி, தசை வலி இரண்டும் பல மாதங்கள் வரை கூட நீடிக்கலாம். தாங்க முடியாத உடல் வலி, தசை வலி, மூட்டு வலி மற்றும் வீக்கம் தான் இக்காய்ச்சலின் முக்கிய பாதிப்புக்கள். இவ்வகைக் காய்ச்சலின் பல பாதிப்புக்கள் டெங்கு காய்ச்சலைப் போலவே இருக்கும். மேலும், ஜிக்கா வைரஸ்



காய்ச்சலும் இது போன்ற பாதிப் புக்களை ஏற்படுத்தலாம். டெங்கு என்றாலும், சிக்குன் குனியா என்றாலும், ஜிகா என்றாலும், இந்த மூன்று வைரஸ் வகைகளையும் பரப்புவது ஏடீஸ் வகை பெண் நுளம் புகள் தான்.

அறிகுறிகள் மிகப் பொதுவாக தெரிந்தாலும் வேறு பல காரணங் களாலும் உண்டாகக்கூடும், சில நாட்களுக்குத் தொடர்ந்து நீடித் தால், ஒரு மருத்துவ நிபுணரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வது நல்லது. சிகிச்சையளிக்கப்படாமல் விட்டால், கண்கள் அதோடு நரம் புகள் மற்றும் இதயம் சார்ந்த சிக்கல் கள் போன்ற பெரும் பாதிப்புகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. வயதான நோயாளிகளில், சிகிச்சை யளிக்கப்படாமல் விட்டால் இது இறப் புக்குக் கூட வழி வகுக்கலாம்

அதீத காய்ச்சல் மற்றும் தீவிர மூட்டு வலி இருப்பின் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

### மருத்துவப் பரிசோதனை

மருத்துவரது பரிசோதனைக்குப் பின் சில ஆய்வுக்கூடப்பரிசோத னைகளைச் செய்து சிக்குன்குனியா காய்ச்சலைப் கண்டு பிடிக்கலாம்.

இரத்தப் பரிசோதனைகள், சிறு நீர் பரிசோதனைகள், நெஞ்சுப் பகுதி எக்ஸ்ரே ஆகியன அடிப்படைப் பரிசோதனைகள்

சிக்குன்குனியா பிசிஆர் பரி



சோதனை மூலம் (RT – PCR – Reverse Transcriptase – Polymerase Chain Reaction) இந்தக் காய்ச்சலைப் பிற வகை வைரஸ் காய்ச்சலில் இருந்து எளிதாக அடையாளம் காண முடியும்.

சிக்குன்குனியா பிசிஆர் பரி சோதனை, காய்ச்சல் ஏற்பட்ட 6 நாள்களுக்குள் செய்வது நல்லது. ஆறு நாள்களுக்குப் பிறகும் காய்ச்சல் இருந்தால், மேக்-எலிசா (MAC-ELISA) பரிசோதனை செய்ய வேண்டி இருக்கும். இதன் மூலம், இவ்வகை வைரஸ் வகைக்கு எதிராக உருவான எதிர்ப் பாற்றல் புரதங்களை அளவிட முடியும்.

### சிக்குன்குனியா சிகிச்சை


சிக்குன்குனியாவிற்கு குறிப் பிட்ட வைரஸ் தடுப்பு சிகிச்சை எதுவும் இல்லை. சிக்குன்குனியா காய்ச்சலுக்கு சிகிச்சை அளிக்கவும், இந்த வைரஸை அழிப்பதற்கும் இன்னும் மருந்துகள் கண்டுபிடிக்கப் படவில்லை. எனவே, இவ்வகைக் காய்ச்சலுக்கும் பொதுவான சிகிச் சைகள், தொந்தரவுகளைக் குறைப் பதற்கான சிகிச்சைகள், பொது வான அறிகுறி ரீதியான சிகிச்சைகளும்

நீரேற்றங்களும் முக்கியமாக வழங்கப் படுகின்றன.

**ஓய்வு:** மீட்புக்கு உதவ போது மான ஓய்வை நோயாளிக்கு வழங்க வேண்டும்

**நீரேற்றம்:** உடம்பில் போது மான நீர்த்தன்மையை பெறுவதற்கு மற்றும் நீர் இழப்பை தடுப்பதற்கு திரவங்கள் குடிப்பது அதிகரிக்கப் பட வேண்டும். காய்ச் சல் அதிகமாக இருந்தால், புறநோயாளியை உள் நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளிக்க வேண்டும். அவருக்கு எளிதில் ஜீரணம் ஆகக் கூடிய கஞ்சி, பழரசம், இளநீர் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும். இது, அவர்கள் சோர்வைப் போக்கும்.. வாய்வழி உணவு உட்கொள்ள முடியாமல் போனால், மருத்துவமனையில் அனுமதித்து அவர்களுக்குத் தேவையான திரவ மருந்துகள், விட்டமின் ஆகிய வற்றை குழாய்கள் வழியாகச் செலுத்தி சிகிச்சை செய்ய வேண்டும். தொந்தரவுகளைக் குறைப்பதற்கான சிகிச்சை. நோயாளியின் காய்ச்சல், உடல் வலியைக் குறைப்பதற்காக பரசிட்டமோல் மருந்து உட் கொள்ள கொடுக்கலாம். இந்த மருந்தை உட்கொள்ள முடியாத நிலையில், காய்ச்சலை குறைப் பதற்கான திரவ மருந்தை குழாய் வழியாகச் செலுத்த வேண்டும்

வலி நிவாரணிகள்: காய்ச்சல் மற்றும் மூட்டு வலியைப் போக்க உதவும். இப்யூபுரூஃபன் போன்ற ஸ்டீரொய்டல் அல்லாத அழற்சி எதிர்ப்பு மருந்துகளை (NSAID கள்) தவிர்க்க வேண்டும், இது இரத்தப்





போக்கு அபாயத்தை அதி கரிக்கலாம். வந்திருப்பது சிக்குன் குனியா இல்லை என்பதை உறுதி செய்த பின்னரே வலி நிவாரணிகளை உட்கொள்ள வேண்டும். சிக்குன் குனியா நோயில் வலி நிவாரணிகள் ரத்தக் கசிவு தன்மையை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பதை கவ னத்தில் கொள்ள வேண்டும்.

இதேபோன்றே, நோயாளிக்கு குமட்டல், வாந்தி ஆகியவற்றைக் குறைப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து கொடுப்பதுடன், நோயா ளியின் காய்ச்சல் அளவு, நாடித் துடிப்பு, ரத்த அழுத்தம், சுவாசத் துடிப்பு, உள் செல்லும் நீர் மற் றும் வெளியேறும் நீரின் அளவு போன்றவற்றைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். இந்த நோயாளிகளுக்கும் அஸ்பிரின் (NSAIDS), பிற வலி குறைப்பான் மருந்துகளை தவிர்க்க வேண்டும். ஏற்கனவே இதய நோயாளியாக இருந்து அஸ்பிரின் மருந்துகளை உட்கொள்வதாக இருந்தால், அது குறித்து மருந்துவரிடம் ஆலோசிக்க வேண்டும். சிக்குன்குனியா தொற்று களைத் தவிர்க்க உடல் நீர் வற்றாமல் பார்த்துக் கொள்ளுங்கள். இந்தக் காய்ச்சல் டெங்குவைப் போல கடுமையான வலி தொந்தரவுகளைத் தந்தாலும், உயிரிழப்பு பாதிப்பை ஏற் படுத்து வதில்லை.

சிக்குன்குனியா அறிகுறிகள் பொது வாக சில நாட்கள் முதல் இரண்டு வாரங்கள் வரை நீடிக்கும், ஆனால் சில சமயங்களில் மூட்டு வலி பல மாதங் கள் நீடிக்கும்.

ஆண்டி ஹிஸ்டமைன்கள்: இவை சொறி காரணமாக ஏற்படும் அரிப்பை போக்க உதவும்.

கடுமையான சந்தர்ப்பங்களில், மருத்துவ கவனிப்பு தேவைப் படலாம், குறிப்பாக அறிகுறிகள் மோசமடைந்தால் அல்லது நோயின் சிக்கல்கள் இருந்தால் வைத்திய சாலையில் அனுமதித்து தொடர்ச் சியான கண்காணிப்பில் கவனித்து கொள்ள வேண்டும்.

### தடுப்பு

சிக்குன்குனியாவை தடுப்பதில் நுளம்புகள் கடிப்பதைத் தவிர்ப்பது மற்றும் நுளம்புகள் பெருகும் இடங் களைக்குறைப்பது ஆகியவை அடங்கும்.

நம்மால் இயன்றவரை வீடுகளுக் குள்ளும் வீடுகளுக்கு வெளியேவும் நீர் சிறிய அளவு கூட தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏடிஸ்

வகை நுளம்புகள் நன்னீரில் முட்டை இட்டு குஞ்சு பொரிப்பவை. மேலும் பகலில் கடிக்கும் தன்மை கொண்டவை.

பூச்சி விரட்டிகளைப் பயன்படுத் துங்கள்: பூச்சி விரட்டி மருந்துகள் அல்லது எலுமிச்சை யூகலிப்டஸ் எண்ணெய் கொண்ட பூச்சி விரட்டி நுளம்பு எதிர்ப்பு களிம்பு தோலில் தடவவும்.

பாதுகாப்பு ஆடை அணியுங்கள்: நீண்ட கை சட்டைகள், நீண்ட பேன்ட்கள், காலுறைகள் மற்றும் காலணிகள் ஆகியவை தோலின் வெளிப் பாட்டைக் குறைக்க உதவும்.

திரைகள் - ஜன்னல்கள் மற்றும் கதவுகளில் கொசுக்கள் வராமல் இருக்க திரைகள் இருப்பதை உறுதி செய்யவும்.

தேங்கி நிற்கும் தண்ணீரை அகற் றவும்: தேங்கி நிற்கும் தண் ணீரில் நுளம் புகள் பெருகும். பூந்தொட்டிகள், வாளிகள் மற்றும் பறவைக் குளியல் போன்ற தண்ணீரை வைத்திருக்கும் கொள் கலன்களை வழக்கமாக சுத்தம் செய்து அடிக்கடி மாற்றிக் கொள் ளவும், மூடி வைக்கவும் அல்லது அடிக் கடி பராமரிக்க வேண்டும்.

நுளம்பு வலைகளைப் பயன் படுத்துங்கள்: நுளம்புகள் அதிகம் உள்ள இடங்களில் தூங்கினால், உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வலைகளைப் பயன்படுத்தவும்.

சிக்குன்குனியா காய்ச்சல் பற்றிய அறிவை பெற்றுக் கொள்வதன் மூலம் அதன் தொடர்பான சிக்கல்களுக்கு செல்ல முன்னரே அதற்கு நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம்.

இப்போது சிக்குன்குனியா காய்ச்சலை உண்டாக்கும் வைரஸ் மரபணு மாற்றங்களுடன் வெளிப் பட்டு வருவதாக ஆய்வுகள் தெரிவிக் கின்றன. பொதுவாக காய்ச்சல் மற்றும் தீவிர மூட்டு வலி ஆகியவற்றுடன் மட்டுமே சிக்குன்குனியா வெளிப் படும். ஆனால் இம்முறை நரம்பியல் பாதிப்புகள் கூடவே பக்கவாதம் ஏற் படுதல் - மூக்கு கறுப்பாக மாறுதல் (இரண்டு வாரங்கள் கழித்து திரும்ப பழைய நிலைக்கு திரும்பி விடுகிறது) - கால் பாத எரிச்சல் நுரையீரல் மற்றும் வயிற்றுப் பகுதியில் நீர் சேர்தல் - மூன்றில் ஒருவருக்கு வாந்தி வயிற்றுப் போக்கு ஏற்படுவது போன்ற விசித்திர புதிய அறிகுறிகளுடன் வெளிப்படுவ தாக கண்டறியப்பட்டுள்ளது .

எனவே டெங்கு சிக்குன் குனியா விலிருந்து நாம் காத்துக் கொள்ள வேண்டுமானால் நுளம்புகள் கடிக் காமல் தடுப்பது, நுளம்புகளை ஒழிப்பது, சுற்றுப் புறத்தைச் சுற்றி நீர் தேங்காமல் தடுப்பது, தூய்மையாக வைத்துக் கொள்வது போன்றவற்றை தொடர்ச்சியாக எமது சூழலில் பேணிக் கொள்ள வேண்டும். எனவே தான் ஆட்கொல்லி நுளம்புகள் கடிப்பதில் இருந்து நம்மையும் நமது பிள்ளைகளையும் காப்பாற்றிக் கொள்ளலாம்.

நன்றி

# ஈரமுள்ள இதயத்தில் ஈர விழி ரோஜாக்கள்

வெள்ளை ரோஜாவாய்
வெண்மை உள்ளத்தில்
வேரூன்றிக் கிடக்கின்றாய்.
விருப்புடன் சிரிக்கின்றாய்
சிவப்பு ரோஜாவாய் சிறிய மனதிற்குள்
செழித்துப் பூரிக்கின்றாய்
சொக்கவும் வைக்கின்றாய்

மஞ்சள் ரோஜாவாய் மென்மை
இதயத்தில் மலர்ந்து விரிகின்றாய்
மெய் மறக்கச் செய்கின்றாய்.
கருப்பு ரோஜாவாய்
குற்றமுள்ள அகத்தில்
கர்வம் அகற்றுகின்றாய்
எழுகின்றாய்

கமழும் ரோஜாவாய்
கலைஞர் இதயங்களில்
காலமெல்லாம் அமருகின்றாய் .
காவியத்தில் நிலைக்கின்றாய்.

வண்ண வண்ண மலராய்
வாழ்க்கைப் பாடம்
விதவிதமாய்சொல்கின்றாய்
வீரம் தரும் முட்களை
வளர்த்துப் பாதுகாப்பு நல்குகிறாய்.

**றஹீமா இன்ஸார்**

# காத்திருப்பு

நேற்றைய பொழுது விடியலோடு
என்னை ஆதிக்கம் செய்த
ஆரவாரங்கள் எல்லாம்
இன்றைய விடியலோடு
இடம் மாறும் என்று தானிருந்தேன்

பொழுதும் விடிந்து
இருளும் சூழ்ந்தாகிற்று
இன்னும் என் எதிர்பார்ப்பிற்கான
ஈரம் தான் காயவில்லை

போகுமிடம் தெரியா
பறவை போல்
பார்ப்போர் கண்ணில்

இவள்(ன்) விதியில் மட்டுமா
இத்தனை இறுக்கம்
தளரும் தான்
கொஞ்சம் தணிந்த பின்னே

**ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்**
புல்மோட்டை





# போதை பாதையை மாற்றும்

ஏன் இந்தக் கோலம்
ஏளனம் செய்யும் காலம்
அகிலம் காணும் அவலம்
வீணாய்க் கழியும் நாளும்.
போதையுனை  வதைத்திடுமே
அற்ப சுகமது

அனைத்தையும் அழித்திடுமே
உன் வாழ்வும் அர்த்தமற்று
குடும்பமும் சீர்குலையுமே.
விளக்கில் விழுந்த
விட்டில் பூச்சியாய் விழுந்து விட்டாய்
விடுதலைக்கு விடை கொடு
விலகினால் விறலடைவாய்

சத்தமின்றி ரத்தமின்றி
உயிரைக் கூறு போடும்.
ஊசி முனை உல்லாசம்
உணர்விழக்கச் செய்யும்.
மதுவும் மதியினை மயக்கும்.
செயற்பாட்டைச் செயலிழக்கும்.
பண்பாட்டைப் பட்டுப்
போகச் செய்யும். காசு கொடுத்துக்
காவு தேடிக் கொள்கின்றாய்.
போதைக்கு அடிமையாகி
பாதை மாறித் தொலைகிறாய்.
ஈன்றவளை எண்ணிப்பாரு.
இல்லறம் வந்தவளிடம்
கரிசனை காட்டு.

உன் போக்கினை எண்ணி
பெற்ற பிள்ளைகளும் நொந்திடும்.
பராமரிப்பின்றிப் பாவப்படுமே.
போதனைகள் ஏற்றுக் கொண்டு
போதையினை விட்டு விடு.
போற வழி அறிந்து
போராடி நலம் பெறு

திருந்தி விடு
திரும்பாது மீண்டும் வாழ்க்கை.
சிந்தித்து சீர் பெற்று
சிகரம் தொட புறப்படு.
போதும் போதும்
போதை வேண்டாம்
பாதை மாறி
பயணித்திடு.

**முபீதா அமீன்**
அக்கரைப்பற்று

# படித்ததில் பிடித்தது

30 ஆண்டுகளுக்கு பிறகு எனது வகுப்பு தோழனை அன்று சந்தித்தேன். நான் அவரை ஒரு ஹோட்டல் லாபியில் மீண்டும் பார்த்தபோது, அவர் எளிமை யானவராக இருந்தார். அவர் எளிய உடைகளை அணிந்திருந்தார்.

நான் கொஞ்சம் நிம்மதியாக உணர்ந்தேன். அவர் என்னிடம் நடந்து வந்து என்னை மீண்டும் பார்த்ததில் மகிழ்ச்சி என்றார். என்னுடன் ஒப்பிடுகையில் என்னை விட கொஞ்சம் வசதி குறைந்த வராகவே தெரிந்தது.

நாங்கள் தொலைபேசி எண்க ளையும், தொடர்பு விவரங்களையும் பரிமாறிக் கொண்டோம். என்னு டையதை கொடுத்தபோது அவர் முகத்தில் ஒரு மகிழ்ச்சியைக் காண முடிந்தது.

பெருமிதத்துடன் எனது புத்தம் புதிய ரேஞ்ச் ரோவரில் அவரை வீட்டில் இறக்கி விடுகிறேன் என்று அவரிடம் சொல்லி அதை அவரிடம் காட்டினேன்.

அவர் மறுத்து, அவர் ஏற்கனவே தனது காரை வரச் சொல்லி இருப்பதாக கூறினார். பழைய தாகத் தோன்றிய அந்தக்கார் 2001 ஹொண்டா'

மறுநாள் அவரை என் வீட்டிற்கு மதிய உணவுக்கு அழைத்தேன். எனது வெற்றியையும் செல்வச் செழிப்பையும் அவருக்குக் காட்ட வேண்டுமே!

நான் வசித்த பார்க்வியூவுக்கு அவர் காரில் வந்தார். எனது வீட் டைப் பார்த்து அவர் ஈர்க்கப் பட்டார். அந்த வீட்டை லோன் போட்டு கடனில் தான் வாங்கி இருந்தேன். நாங்கள் மதிய உணவு சாப்பிட்டோம்.

அவர் சிறு வணிகம் மற்றும் ரியல் எஸ்டேட்டில் இருப்பதாக என்னிடம் கூறினார். நான் அவருக்கு எப்படி உதவுவது என்று கேட்டேன்.

அவர் நலமாக இருப்பதாக கூறி மறுத்து விட்டார். ஆர்வமிருந்தால் கொஞ்சம் கடனை அடைக்க உதவு கிறேன் என்று கூட சொன்னேன். அவர் என்னைப் பார்த்து சிரித்தார்.

அவர் என்னை விரைவில் அவரது வீட்டிற்கு அழைப்பதாக என்னிடம் கூறினார். அவருடைய பழைய கார் வந்தது. என்னிடம் இருப்பவற்றிற்கு நான் கடவுளுக்கு நன்றியுள்ளவனாக இருந்தேன். 'விரல்கள் அனைத்தும் சமமாக இல்லை' என மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

நான் அதிர்ஷ்டசாலி. நான் நல்ல கம்பெனியில் வேலை செய் கிறேன்.

இரண்டு வாரங்கள் கழித்து, அவரைப் பார்க்க நானும் என் மனைவியும் சென்றோம். அந்த நண்பனின் அந்தஸ்தில் அவள் ஈர்க்கப் படாததால் கூட வரத் தயங்கினாள்.

கல்லூரியில் நாங்கள் நெருங்கிய நண்பர்கள் என்பதை சொல்லி என்னால் அவளை எளிதில் சமாதா னப்படுத்த முடிந்தது.

எஸ்டேட்டைப் பார்த்தோம். அவரது வீட்டிற்குச் செல்லும் வழியைக் கேட்டோம். எங்களை வழி நடத்துபவர்கள் அவருடைய பெயரை கேட்டவுடன் மரியா தையுடன் பேசினார்கள்.

அது ஒரு எளிய ஆனால் அழ கான வீடு. ஒரு 4 படுக்கையறை பங்களா. முன்னால் 4 கார்கள் நிற் பதைப் பார்த்தேன்.

நாங்கள் அவரது வீட்டிற்குள் நுழைந்தோம். அது உள்ளே மனதை தொடும் அழகுடன் எளிமையாக நேர்த்தியாக இருந்தது. எங்களை அன்புடன் வரவேற்றார்.

மதிய உணவு நன்றாக பரிமாறப் பட்டது. மதிய உணவின் போது, அவர் எனது எம்.டி பற்றி கேட்டார். அவர்கள் இருவரும் நண்பர்கள் என்று கூறினார்.

அருகில் இருந்த அவரது டேபிள் ஒன்றில் கம்பெனி கிஃப்ட் ஒன்றைப் பார்த்தேன். நான் பணி புரிந்த கம்பெனியின், சுமார் 38% பங்குகளை அந்த கம்பெனி வைத் திருந்தது.

அவரிடம் இதுபற்றி விசாரித்தேன். அவர் சிரித்தார். அவர் என்னிடம், அந்த கம்பெனி தன்னுடையது என்று சொன்னார்.

இந்த பெரிய தோட்டமும் அவ ருக்குச் சொந்தமானது என்றார். எப்போது 'சார்' என்று கூப்பிட்டேன் என்று தெரியவில்லை.

எனக்கும் அவர் மீது பிரமிப்பு ஏற்பட்டது.

பணிவு பற்றி நான் ஒரு பாடம் கற்றுக்கொண்டேன்.

ஒரு பெரிய பாடம்.

தோற்றம் ஏமாற்றும்.

என் அசௌகரியத்தை அவர் கவனித்தார். வீட்டிற்குத் திரும்பும் போது நான் மிகவும் அமைதியாக இருந்தேன்.

என் மனைவியும் பணிவாகவும் மிகவும் அமைதியாகவும் இருந் தாள். அவள் மனதில் உள்ள எண் ணங்களை என்னால் உணர முடிந்தது. கார் கண்ணாடியில் நான் என் னையே பார்த்தேன்.

கடன்கள், அதிக சுமைகள் ஆகியவற்றில் வாழ்கிறேன், ஆனால் எனக்குச் சம்பளம் கொடுப்பவர் மிகவும் அமைதியானவர், எளிமை யான வாழ்க்கை வாழ்கிறார்.

உண்மையில் ஆழமான ஆறுகள் அமைதியாக ஓடுகின்றன.

மற்றவர்கள் பெருமையாகப் பேச வேண்டும் என்று வாழ்வதை விட, உங்கள் நிம்மதிக்காக வாழுங்கள்!

பகிர்வு:

**ஸ்ரீலதா** - குருக்கள் மடம்

# கொடுப்பதும் தடுப்பதும் வல்ல இறைவனே!



- ஒரு கன்னிப் பெண் குழந்தையைப் பெற்றெடுக்கிறார்…(அன்னை மர்யம்)
- பால் குடி குழந்தை பேசுகின்றது…(நபி ஈஸா அலை)
- மூதாட்டி கர்ப்பம் தரிக்கிறார்…(நபி இப்ராஹிம் அலை)
- முதுமையின் தள்ளாத பருவத்தை அடைந்த ஆணுக்கும் மலடான பெண்ணுக்கும் குழந்தை பிறக்கின்றது…(நபி ஜக்கரியா அலை)
- சந்திரன் பிளந்து போகின்றது… (ஸூரா கமர்)
- தூங்கியவர்கள் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பிறகு எழுகின்றார்கள்… (ஸூரா கஹ்ப்)
- சொற்ப குழுவினர் பெரும் படையை வெற்றி கொள்கின்றனர்…(பத்ர் போர்)

இவை அல்குர்ஆன் கூறும் வரலாற்று உண்மைகள். இவற்றை செய்வித்த வல்ல இறைவன் உங்களது அத்தனை கஷ்டங்கள், கவலைகளையும் நீக்கித் தருவான். உங்களது காரியங்களை இலகு படுத்தி, வாழ்வில் விடிவையும் வழங்குவான். அவனால் முடியா தது எதுவுமில்லை. அவனையன்றி செய்விக்க யாரு மில்லை.

உங்கள் எதிர்பார்ப்புகள் தாமத மாகலாம். அதிலும் உங்களுக்கு நலவுகளே இருக்கும். கொடுப்பது மட்டும் அருள் அல்ல. சிலநேரம் அவன் தடுப்பதும் கூட அருளாக இருக்கும். உங்களது தேவைகள், கவலை களை நம்பிக்கையுடன் அவனிடம் முறையிடுங்கள்.


அவனே அனைத்துக்கும் போதுமானவன்

**பானு ஜிப்ரி**
சாய்ந்த மருது

## நூல் விமர்சனம் - வெலிகம ரிம்ஸா முஹம்மத்

# என் மேல் விழுந்த மழைத் துளிகள்’

### அனுபவக் கட்டுரைகள் பற்றிய ஒரு பார்வை




பேராதனைப் பல்கலைக்கழக கலைப் பட்டதாரியான மரீனா இல்யாஸ் ஷாஃபி அவர்கள், எழில் கொஞ்சும் மலையகத்தை பிறப் பிடமாகக் கொண்டவர். தற் போது நியூ சிலாந்தில் வசித்து வருகின்றார். அங்கு பல்கலைக்கழகமொன்றில் சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் இவர், ஒரு சிறந்த எழுத்தாளர், கவிஞர், சிறுகதையாசிரியர், வானொலி நாடகக் கலைஞர், ஊக்குவிப்புப் பேச் சாளர், சமூக சேவையாளர் எனப் பன் முகங்களைக் கொண்டவர்.

இவருடைய கவிதைகளில் கவி நயம் சொட்டும். சிறுகதைகளை இவர் எழுதும் போது கையாளும் மொழிநடை வாசகர்களைச் சுண்டி இழுக்கும். நாடகங்களை இவர் எழுதும் போது பயன்படுத்தும் மொழி நடை மிகவும் இரசனையாக அமைந்திருக்கும். இவர் எழுதும் கட்டுரைகள் மட்டும் விதி விலக்கா என்ன? கட்டுரைகளை எழுதும் போது இவர், தனது அனுபவக் கருத்துக்களை இலக்கிய நயத்தோடு வாசகர்களுக்கு முன் வைக்கும் பாங்கு அலாதியானது. மொத்தத்தில் இவருடைய ஆக்கங்கள் யாவும் இலக்கிய வாசகர்களை கவர்ந் திழுக்கும் தன்மை உடையவை.

அவுஸ்திரேலியாவின் வளர்பிறை பதிப்பகத்தின் மூலம் மரீனா இல்யாஸ் ஷாஃபீயின் ’என் மேல் விழுந்த மழைத் துளிகள்’ என்ற மகுடத்தில் அமைந்த அனுபவக் கட்டுரைகளின் தொகுப்பு நூலானது 132 பக்கங்களில் அண்மையில் வெளி வந்திருக்கிறது.

தான் இதுவரை முகநூலில் எழுதி வந்த அனுபவக் கட்டுரைகள் பலவற்றில் தெரிவு செய்த 33 அனுபவக் கட்டுரைகளைத் தொகுத்து ‘என் மேல் விழுந்த மழைத் துளிகள்’ என்ற

இந்த நூலை வெளியிட்டுள்ள நூலா சிரியர், தனது பெற்றோர்களான மர்ஹூம் முகம்மது இல்யாஸ், மஸ்தூரா உம்மா மற்றும் தனது அன்புக் கணவர் அஷ்ஷேய்க் செய்யத் ஷாஃபி ஆகியோருக்குத் தனது நூலைச் சமர்ப்பணம் செய்துள்ளார். சமர்ப்பணத்தை தொடர்ந்து நூலாசிரியர் எழுதியுள்ள 'மலைகளைக் குடைந்து தான் மாற்றங்களை உருவாக்க முடியும் என்றில்லை. அழகிய வார்த்தை களுக்கும் அந்த சக்தி இருக்கின்றது' என்ற வாசகம் என்னை மிகவும் கவர்ந்தது. தொடர்ந்து நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபன பணிப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான யூ.எல். யாக்கூப் அவர்கள் முன் வைத்துள்ள பின்வரும் கருத்து கவனிக்கத் தக்கது.

'அறிவுபூர்வமான கட்டுரைகள் தொடர்பு சாதனத் துறையில் அண்மைக் காலமாக பாரிய அளவில் தாக்கம் செலுத்தி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. குறிப்பாக எழுத்தாற்றல் என்பது நவீன உலகை வடிவமைக்கும் நிகழ்ச்சி நிரலில் முன்னிலை வகிக்கின்றது. கட்டுரைகளைப் பொறுத்த வரையில் ஆய்வுக் கட்டுரைகள், அரசியல் கட்டுரைகள், அனுபவக் கட்டுரைகள் என்பவை ஊடகங்களுடன் மிக நெருக்கமாகப் பின்னிப் பிணைந்து இருக்கின்றன. அந்த வரிசையில் நியூ சிலாந்தில் இருந்து மரீனா இல்யாஸ் ஷாஃபீ தனது வாழ்வின் அனுபவங்களை கட்டுரைகளாக எழுதி, ஆஸ்திரேலியாவில் இருந்து இயங்கி வரும் 'இன்பத்தமிழ் வானொலி' யில் வாராந்தம் ஒளி பரப்பாகி வரும் 'வளர்பிறை' நிகழ்ச்சியினூடாக காற்றலை வழியே கலை வடிவங்களாகப் படைத்திருப்பது மகிழ்ச்சி தரும் ஒரு விடயமாகும். அதனையும் தாண்டி அவர் தனது கட்டுரைகளை முக நூலில் பதிவேற்றம் செய்திருப்பது நவீன ஊடகத் துறையில் இன்னும் ஒரு சாதனையாகவே நான் கருது கின்றேன்'.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபன பணிப்பாளர் இரத்தின சிங்கம் கணபதிப் பிள்ளை, தின கரன் வாரமஞ்சரி ஆசிரியர் தே. செந்தில் வேலவர் ஆகியோரின் வாழ்த்துரைகளோடு, வலம்புரி கவிதை வட்டத்தின் தலைவர் என். நஜ்முல்ஹுசைனின் அணிந்துரையும் நூலை அலங்கரிக்கின்றன. தான் எழுதியுள்ள கட்டுரைகள் குறித்து நூலா சிரியர் தனதுரையில், 'இங்கே நான் குறிப்பிட்டுள்ள நிகழ்வுகள் வெறும் கற்பனையல்ல. இரத்தமும் சதையும் கலந்து எழுதப்பட்ட, உணர்வுகளுடன் பின்னிப் பிணைந்த சம்பவங்கள். உடலும் உள்ளமும் சோர்ந்து, தளர்வடைந்து, இனி வாழ்ந்தது போதும் என்று அலுப்புத் தட்டும் போதெல்லாம் இந்த அனு பவங்களை மீட்டிப் பார்த்து ஒரு கோப்பைத் தேநீர் போல் ஊற்றிப் பருகி, என்னை நானே உற்சாகப் படுத்திக் கொள்வேன்' என்று குறிப் பிட்டுள்ளார்.

இனி நூலாசிரியர் நூலின் உள்ளடக்கத்தில் முன் வைத்துள்ள விபத்து, பஸ் பயணம், மனித நேயம், பாதை தவறிய பயணம், சொர்க்கத்தின் சிறு துண்டு, நியாயத்தை தேடி, உங்கள்

கணவருக்கு எத்தனை மனைவிகள்?, மறு பக்கம், தவறிப் போன மரணம், ஒரு புன்னகையின் விலை, பூட்டப்படாத வீடுகள், வியாபாரிகள் அற்ற கடைகள், தூங்காத இரவுகள், ஒரு திகில் பல திருப்பங்கள், அதிசயத் தீவு, ஹிச் ஹைக்கிங் (hiking) மாற்றங்கள், மூச்சுத் திணறிய புற்கள், துணை, மனச்சாட்சி, தற்கொலை முயற்சி, கொரோனா தொற்றாளி, எதிர்வீட்டு ஜன்னல், திருமணம், சட்டத்தில் ஓர் ஓட்டை, சீருடை மாற்றுவதற்குள், இரண்டு வருடங்களின் பின்பு, படிக்கற்கள், வீட்டைச் சுமந்து செல்லல், தூண்டில், வெள்ளம், கனவு நிறைவேறிய நாள், பாதியில் சிதறிய பயணம் ஆகிய 33 தலைப்புகளில் அமைந்துள்ள அனுபவக் கட்டுரைகளில் சில வற்றை மாத்திரம் வாசகர்களின் இரசனைக்காக இங்கே எடுத்து நோக்குவோம்.

'விபத்து' (பக்கம் 23) என்ற தலைப்பில் அமைந்த முதலாவது அனுபவக் கட்டுரையானது அவ்வப் போது சிறிய சிறிய துன்பங்கள் ஏற்படும் போதெல்லாம் துவண்டு போகும் மனிதர்களுக்கு சிறந்த படிப்பினையைத் தருவதாக அமைந் துள்ளது. நூலாசிரியர் தனது பய ணத்தில், தான் எதிர் கொண்ட விபத்தின் மூலம் சக்கர நாற்காலி யில் காலம் கழித்த நாட்களை மிகுந்த துயரோடு நினைவுபடுத்தி, வல்ல நாயன் அல்லாஹ்வின் துணை யோடு, அவர் எழுந்து நடந்த கதையைப் பதிவு செய்துள்ளார். இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது எனது மனமும் ஒரு நிமிடம் கலங்கித் தான் போனது. இந்தக் கட்டுரையின் மூலம் மன உறுதியுடன் கூடிய இறை நம்பிக் கையானது வாழ்க்கையின் எந்தத் துயரமான கட்டத்தையும் கடக்க வைக்கும் என்பதை மிகவும் அருமை யாகச் சொல்லி நிற்கின்றார்.

கை, முதுகு, கழுத்து என்று உடல் முழுவதுமான காயங்களோடு கால் எலும்பு முறிந்து இரண்டு வருடங்களாக எழுந்திருக்க முடியாமல் சக்கர நாற்காலியே கதியென்றிருந்த வருக்கு மீண்டும் பழைய நிலைக்கு வர முடியுமா என்று தெரியாத சந்தர்ப் பத்திலும் இறைவனின் கருணையில் நம்பிக் கையை இழக்காத நிலையில் தொடர்ந்து பிரார்த்தனை செய்து உடல் நிலை தேறி மறுபடியும் பழைய நிலைமைக்கு மாறி வந்த கதையை வாசிக்கும் போது உண்மையில் எனது மேனியும் புல்லரித்துப் போய் விட்டது. சோதனைகள் பலவற் றையும் ஈமானை பலப்படுத்தும் செயற்பாடாக பார்க்கும் நூலாசிரியரின் மனப் பாங்கு எமது ஈமானையும் அதிகரிப்பதாக அமைந்து விடு கின்றது.

'பாதை தவறிய பயணம்' (பக்கம் 32) என்ற தலைப்பில் அமைந்த அனுப வக் கட்டுரையும் ஒரு வகையான புத்துணர்ச்சியைத் தருவதாகவே அமைந்துள்ளது. நியூசிலாந்திலுள்ள மிக உயரமான 'மவுண்ட் குக்' என்ற மலையின் இடைக்கிடையே இருக்கும் குன்றுகளில் ஏறி அழகிய இயற்கைக் காட்சிகளைப் பார்ப்பதற்காக பல உள் நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வது வழக்கம். அங்கிருக்கும் ஒரு குன்று வரை பயணித்து, பனிப்பாறையைப் பார்க்கும் ஆசை நம் நூலாசிரியருக்கும்

ஏற்படவே தனது கணவர் மற்றும் அவருடைய நண்பர்கள் பலருடன் பயணத்தை ஆரம்பித்த பொழு தொன்றில் பாதி தூரத்தைக் கடக்க முன்பே கூட வந்தவர்கள் காணாமல் போய் விட்டார்கள். அதற்குக் காரணம் நூலாசிரியரின் உடல்நிலை சற்று இந்தப் பயணத்துக்கு ஒத்துழைப்பு வழங்காமைதான். நூலாசிரியருடன் வந்த நண்பர்கள் மெல்ல மெல்ல நடந்து செல்ல விரும்பவில்லை. அவர்கள் அவசரமாகச் சென்றே இயற்கைக் காட்சிகளை இரசிக்க விரும்பினார்கள்.

வேறு வழியில்லாத நிலையில் மிகவும் களைத்துப்போன நிலையில், தாங்க முடியாத முட்டுக்கால் வலியுடன் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் மனோதைரியத்தை வரவழைத்துக் கொண்டு இறை யோனைப் பிரார்த்தித்து, மலை அடிவாரத்தில் உள்ள நீர் வீழ்ச்சியை மட்டும் பார்த்து விட்டு கணவர் மற்றும் தெரிந்தவர்களின் துணையோடு நம் நூலுரசிரியர் திரும்பிவிட்டார். இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது மனிதர்களை நம்பிப் பயனில்லை. ஆனால் இறை நம்பிக்கை எதையும் சாதிக்க வைக்கும் என்ற ஒரு புதுத் தெம்பை விதைத்துச் செல்கின்றது.

இதுவரை மிகுந்த துயரத் தோடும், மேனி சிலிர்க்கின்ற வகையிலும், ஆச்சரியத்தோடும் கட்டுரைகளை வாசித்து வந்த எனக்கு 'உங்கள் கணவருக்கு எத்தனை மனைவிகள்..?' (பக்கம் 43) என்ற கட்டுரைத் தலைப்பு ஒரு சுவாரஷ்யத் தன்மையை ஏற் படுத்தியது. இந்தக் கேள்விக்கு என்ன பதிலைத் தான் எழுதி இருப்பார் என்று யோசித்துக் கொண்டே கட்டுரையை வாசித்தேன். விரிவுரை மண்டபத்தில் மாணவர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வியே இது. அதற்கு இவர், 'சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக பலதார மணம் அனுமதிக்கப் பட்டு இருக்கிறதே தவிர அது கட்டாயம் நடை முறைப் படுத்தப் பட வேண்டிய ஒரு செயல் அல்ல' என்று மிகவும் அழகாகப் பதில் சொல்லியுள்ளார்.

ஏதோ ஒரு காரணத்துக்காக ஒரு ஆண், இன்னொரு பெண்ணை இரண்டாவதாகத் திருமணம் செய்ய நேரிட்டால் அந்த ஆணின் கடமைகள் என்ன என்பதையும், அந்தப் பெண்ணின் உரிமைகள் என்ன என்பதையும், முக்கியமாக அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளின் பராமரிப்பு பற்றியும் தெளிவாக முன் வைத்து, ஒரு முஸ்லிம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் எந்த ஒரு குழந்தையும் 'தனக்கு தந்தையின் பெயர் தெரியாது' என்று முறையிடக் கூடிய அவலம் நேர வாய்ப்பில்லை என்பதையும் தெளிவாக மாணவர்க ளிடம் விளக்கியுள்ளார்.

'தவறிப்போன மரணம்' (பக்கம் 50) என்ற திகில் கட்டுரையா னது தலைப்புக்குள் நிறுத்தப் பட்டிருந்தாலும் அந்தக் கட்டு ரைக்குள் வரும் ஒற்றைக் கதா நாயகியான அந்தப் பெண்ணுக்கு இறுதியில் என்ன நடந்திருக்கும் என்ற கேள்வி கட்டுரை மீதான முடிவு இன்னும் நீள வேண்டும் என்ற மனோ பாவத்தை ஏற்படுத்தி நிற்கின்றது என்பதையும் மறுப் பதற்கில்லை.

'வியாபாரிகள் அற்றக் கடைகள்' (பக்கம் 60) என்ற கட்டுரையை வாசிக்கும் போது ஒரு கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பது போன்ற ஒரு உணர்வு தொற்றிக் கொள்கின்றது. கண்ணிமைக்கும் நேரத்தில் கூட பொருட்களை திருடிச் செல்கின்ற ஒரு சூழலில் வசிக்கின்ற எமக்கு இந்தக் கட்டுரை புதுமையான விடயத்தைச் சொல்லி நிற்கின்றது. இப்படியும் சாத்தியமா என்று நினைக்கத் தோன்றுகின்றது. 'பொய்யும் ஏமாற் றமும் களவும் ஊறிப்போன ஒரு சமூகத்தில் வியாபாரிகள் அற்ற கடைகள் என்ற கோட்பாடு வெறும் கனவாகவே இருக்கும். ஆனால் மனச்சாட்சியை மதித்து வாழப் பழகிக் கொண்டால் இதுவும் சாத்தியமே' என்ற நூலாசி ரியரின் வரிகள் அந்தக் கோட்பாட்டை உறுதிப்படுத்தி, தான் கண்ட யதார்த்தத்தை சிறப்பாக முன் வைத்துள்ளார்.

'அதிசயத் தீவு' (பக்கம் 71) என்ற கட்டுரை கடல் கடந்து ஒரு குட்டித் தீவைப் பார்க்கப் போன விடயத்தைப் பேசுகின்றது. மினி பஸ்ஸின் அளவுகூட இல்லாத, குட்டியாக ஒரு வேனில் பறப்பது போன்ற உணர்வைத் தரக்கூடிய ஒன்பது பேரை மட் டுமே சுமந்து செல்லக்கூடிய ஒரு சிறிய விமா னத்தில் குட்டித் தீவைப் பார்க்கப் பயணித்த கதையை நூலா சிரியர் பயம், பதட்டம், உற்சாகம் கலந்து முன்வைத்துள்ளார். இந்தக் கட்டுரை முழுவதையும் வாசித்த போது 'அண்டாட்டிக்கா' வுக்கு அருகில் உள்ள 'ஸ்டீவர்ட் ஐலண்ட்' என்ற அந்த அழகிய தீவைப் நாமும் பார்த்துவிட்டு வந்தது போன்ற ஒரு உணர்வே ஏற்பட்டது. எல்லா வற்றையும் விட இந்தத் தீவில் திருடர்களே இல்லை என்ற செய்தி மகிழ்ச்சி தருகின்றது.

'வீட்டைச் சுமந்து செல்லல்' (பக்கம் 115) என்ற கட்டுரையானது மிகவும் ஆச்சரியமான ஒரு தகவலைக் கூறி நிற்கின்றது. அதாவது நியூ சிலாந்தில் வீடுகள், ஹோட்டல்கள் போன்றவை இட மாற்றம் செய்யப் படுகின்றதாம். நியூசிலாந்தில் வீடுகள் எப்போதும் நிலத்திலிருந்து கொஞ்சம் உயரமாக இருக்குமாம். அங்கு அடிக்கடி நில நடுக்கம் ஏற்படும் அபாயம் இருப்பதால் பாதுகாப்புக் கருதியே இவ்வாறு பலகை வீடுகள் அமைக்கப்படுகின்றதாம். இப்படி நில நடுக்கம் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் வீடுகளை ஓர் இடத்திலிருந்து இன் னொரு இடத்துக்கு இடம் மாற்று கிறார்களாம். நியூ சிலாந்தின் வெல் லிங்டன் நகரில் அமைந்துள்ள 40 விருந்தினர் அறைகளைக் கொண்ட ஒரு ஹோட்டல் கூட ஒரு தளத்தி லிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப் பட்டிருக்கிறதாம். இதுபோன்ற தக வல்களை இந்தக் கட்டுரை எமக்கு எடுத்தியம்புகின்றது.

இலக்கிய இரசம் சொட்டும் இவருடைய எழுத்துக்கள், நிச்ச யமாக வாசகர்களை வசீகரிக்கும் தன்மை வாய்ந்தவை. பொதுவாக இவருடைய படைப்புகளை நோக் கும் போது அவை சமூகத்துக்குத் தேவையான, முக்கியமான கருத்து களை முன் வைப்பதாகவே அமைந்துள்ளன. 'என் மேல் விழுந்த மழைத்துளிகள்' என்ற அனுபவக்கட்டு ரைகளானது வாசகர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகவே அமைந்துள்ளன.

மரீனா இல்யாஸ் ஷாஃபீ அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை முன்வைத்துள்ள இந்த நூலானது வாசகர்களான எமக்கு சிறந்த ஆலோசனைகளையும், நல்ல படிப்பினைகளையும் தருகின்றன என்பதைத் துணிந்து கூறலாம். எனவே இவருடைய இந்தக் கட்டுரைத் தொகுதி இலக்கிய வாசகர்கள் அனைவரையும் நிச்சயமாகக் கவரும். இருந்தாலும் ஒன்றைக் குறிப்பிட வேண்டியது தவிர்க்க முடியாதுள்ளது. நூல் வடிவமைப்பில் இன்னும் கூடிய கரிசனை காட்டியிருக்கலாம். அதிலும் குறிப்பாக பந்தி பிரித்தல் போன்ற முக்கியமான விடயத்தை நல்ல அவதானிப்புடனே செய்திருக்க வேண்டும். அடுத்த வெளியீடு இன்னும் சிறப்பாக வெளி வர வேண்டும் என்பதற்காகவே இங்கு இதனைக் குறிப்பிடுவது அவசியமாகின்றது. இறுதியாக தொடர்ந்தும் பல காத்திரமான இலக்கிய நூல்களை வாசகர்களுக்குத் தரவேண்டும் என்ற வேண்டுகோளுடன், கலாநிதி மரீனா இல்யாஸ் ஷாஃபீ அவர்களுக்கு எனது வாழ்த்துகளையும் தெரிவிக்கின்றேன்.

| | |
|---|---|
| **நூல் :-** | என்மேல் விழுந்த மழைத்துளிகள் |
| **நூல் வகை:-** | அனுபவக் கட்டுரைகள் |
| **நூலாசிரியர்:-** | மரீனா இல்யாஸ் ஷாஃபீ |
| **வெளியீடு** | :- வளர்பிறை பதிப்பகம் |
| **விலை** | :- 800 ரூபாய் |



# என் பூனை

பஞ்சுப் பொதியின் கனத்தில்
உன் வெண்ணிறத் தேகம்
அழகின் அற்புதம் ...
கீறலாய் தெரியும் விழிகளை
சுழற்றி
நீ பார்க்கும் பார்வையில்
அன்பின் சிதறல்கள்....
என் உணர்வு மாற்றங்களால்
உண்டாகும் வலிகளின் உச்சத்தில்
சுளீரென விசிறப்படும்
பிரம்பின் வலியிலும்
நம்பிக்கையின்றி தள்ளி நின்று
தவித்துப் பார்க்கிறாய்....
அப்படியென்ன பந்தம்
உனக்கும் எனக்கும்.....
மாந்தருக்கிடையே
பந்தம் மரித்துப் போன
இக்காலத்தில்
உன்னுடனான என் பந்தம்
ஓங்கியே நிற்கிறது. - என்
வலிகளுக்கு வடிகாலாய்
நீ இருக்கிறாய்
உன் வலிகளைத்
தாங்கிக் கொண்டு ...

**சுஸானா முனாஸ் -** மூதூர்

# உயிரானவள்

உயிராய் வந்தவளே
உணர்வில் கலந்தவளே!
நினைவில் வந்தவளே
மனமதில் இருப்பவளே

வெண்ணிலவாய் ஒளித்தரும்
நீ என் தேவதையே
காதலால் என்னை
உனதாக்கிக் கொண்டவளே

காரிகையே! பார்வையால்
புதுமை படைப்பவளே
தேனிதழால் கன்னத்தில்
முத்தமிட்டு நிற்பவளே!

உறக்கத்தில் வருகின்றாய்
கனவிலும் வருவாயே!
கண்ணெதிரே தோன்றுகிறாய்
கனவைக் கலைக்கிறாய்

வீசிடும் தென்றலாய்
மேனியை உரசுகிறாய்!
அருகினில் அமர்ந்தவளே
இனிமையாய் பேசிடுவாய்

மென்னகையாய் சிரிப்பவளே!
என்னில் கலந்தவளே
ஆனந்த ஆசைகளின்
ஆலாபனை நீயாவாய்!

உள்ளத்தில் குடிகொள்ள
என்னையே மறக்கிறேன்
சொந்தமாகி என் வாழ்வில்
துன்பங்களைக் களைந்தவளே!

காதலில் கட்டிப்போட்டாய்
என்னைக் கவர்ந்திட்டாய்
நேசமதில் விழுந்தேன்
அன்பினில் கவிழ்ந்தேன்

சரணடைந்தேன் நானும்
வாழ்வில் உன்னோடு

**கவிஞர்.**
**இரா.சீ.பாலகுமார்**.M.A
(ஊடகவியல் சங்க உறுப்பினர்/
பத்திரிகையாளர்)



# படித்ததில் பிடி(சிரி)த்தது



பீட்சாவை ஆர்டர் செய்ய ஒரு நபர் பீட்சா ஹட்டுக்கு போனில் அழைக்கிறார்...

**ஆண் :** இது பீட்சா ஹட்டா?

**கூகுள்:** இல்லை சார், இது கூகுள் பீட்சா.

**ஆண்:** நான் தவறான எண்ணை டயல் செய்திருக்க வேண்டும், மன்னிக்கவும்.

**கூகுள்:** இல்லை சார், கூகுள் பீட்சா ஹட்டை கடந்த மாதம் வாங்கிவிட்டது.

**ஆண்:** சரி. நான் பீட்சா ஆர்டர் செய்ய விரும்புகிறேன்.

**கூகிள் :** நீங்கள் வழக்கமா சாப்பிடும் பீட்ஸா வேண்டுமா, சார்?

**ஆண்:** வழக்கமா சாப்பிடும் பீட்ஸா என்ன என்று தெரியுமா?

கூகிள் : உங்கள் ஐடி தரவுகளின்படி, கடந்த 12 முறை நீங்கள் அழைத்தபோது, ஹார்ட் க்ரஸ்ட் , எக்ஸ்ட்ரா மூன்று சீஸ்கள், சாசேஜ் , பெப்பரோனி, காளான்கள் மற்றும் மீட் பால்ஸ்கள் கொண்ட எக்ஸ்ட்ரா லார்ஜ் பீட்சாவை ஆர்டர் செய்தீர்கள்.

**ஆண்:** சூப்பர்! அதுதான் நான் எப்பவும் ஆர்டர் செய்வேன் !

**கூகிள் :** ஆனால் இந்த முறை நீங்கள் ஒரு முழு கோதுமையில் க்ளுட்டன் கொழுப்பு குறைந்த ரிக்கோட்டா, அருகுலாதீ, சீஸ் , வெயிலில் உலர்த்திய தக்காளி மற்றும் ஆலிவ்கள் கொண்ட பீட்சாவை ஆர்டர் செய்ய பரிந்துரைக்கலாமா?

**ஆண்:** என்ன இது ? எனக்கு சைவ பீட்சா வேண்டாம்!

**கூகிள் :** உங்க கொலஸ்ட்ரால் சரியில்லை சார்.

**ஆண்:** அது உங்களுக்கு எப்படித் தெரியும்?

**கூகிள் :** சார், உங்கள் மருத்துவப் பதிவுகளுடன் உங்கள் வீட்டு ஃபோன் எண்ணையும் ஒப்பீடு செய்துள்ளோம். கடந்த 7 ஆண்டுகளாக நீங்கள் செய்த இரத்தப் பரிசோதனையின் முடிவுகள் எங்களிடம் உள்ளன.

**ஆண்:** சரி, ஆனால் உங்கள் அழுகிய சைவ பீட்சா எனக்கு வேண்டாம்! நான் ஏற்கனவே கொலஸ்ட்ராலுக்கு மருந்து சாப்பிட்டு வருகிறேன்.

**கூகிள் :** மன்னிக்கவும் ஐயா, ஆனால் நீங்கள் தொடர்ந்து மருந்து உட்கொள்ளவில்லை. எங்கள் கிட்ட இருக்கும் ரெக்கார்ட்ஸ் என்ன சொல்லுது என்றால் , 4 மாதங்களுக்கு முன்பு லாயிட்ஸ் மருந்தகத்தில் ஒருமுறை 30 கொலஸ்ட்ரால் மாத்திரைகள் கொண்ட ஒரு பெட்டியை மட்டுமே வாங்கியுள்ளீர்கள்.

**ஆண்:** நான் வேறொரு மருந்தகத்தில் இருந்து அதே மாத்திரையை  அதிகம் வாங்கியுள்ளேன்;

**கூகிள் :** அது உங்கள் கிரெடிட் கார்டு அறிக்கையில் காட்டப்படவில்லை சார்.

ஆண்: நான் பணமாக செலுத்தி மாத்திரை வாங்கினேன் .

கூகிள் : ஆனால் உங்கள் வங்கி ஸ்டேட்மென்ட் படி அதற்கு நீங்கள் தேவையான பணத்தை எடுக்கவில்லை.

ஆண்: என்னிடம் வேறு பணம் இருந்ததது.

கூகிள் : சட்டத்திற்கு முரணான, அறிவிக்கப்படாத வருமானத்தைப் பயன்படுத்தி நீங்கள் வாங்கியிருந்தால் தவிர, உங்கள் சமீபத்திய வரிக் கணக்குகளில் அது காட்டப்படவில்லை !

ஆண்: வாட் தி ஹெல் இஸ் திஸ் !

கூகிள் : மன்னிக்கவும் சார், உங்களுக்கு உதவ வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மட்டுமே இதுபோன்ற தகவல்களைப் பயன்படுத்துகிறோம்.

ஆண்: இனி இந்த கூகுள், ஃபேஸ்புக், ட்விட்டர், வாட்ஸ்அப் உபயோகபப்டுத்த மாட்டேன் போதும்! போதும் ! இன்டர்நெட், டி.வி., போன் சர்வீஸ் இல்லாத, என்னை உளவு பார்க்கவோ யாரும் இல்லாத தீவுக்குப் போகிறேன்.

கூகிள் : எனக்கு புரிகிறது சார், ஆனால் முதலில் உங்கள் பாஸ்போர்ட்டை புதுப்பிக்க வேண்டும். அது 6 வாரங்களுக்கு முன்பு காலாவதியாகி விட்டது

(நகைச்சுவைக்காக மட்டுமே!)

**பார்த்தீபன்** - மொரொக்கோ

# என் நேசித்தலில்....



எனையீன்ற அன்னையும்
என்னன்புத் தந்தையும்,
என்றென்றும் என்னெஞ்சினில்
என் நேசிப்பினில் நிறைந்திருப்பர்
அவனியிலே அவதரித்துக்
கல்வியறிவும் கண்ணியமும்
நான்பெற நாளெல்லாம்
தியாகித்து நலிந்தவர்கள் அவர்கள்

ஒன்றல்ல இரண்டல்ல
ஐயிரண்டு மகவுகள்பெற்று
அத்தனையும் கற்றிடக்
கனவு கண்டு வென்றவர்கள்
நீதியையும் நேர்மையையும்
எங்களின் நெஞ்சங்களில்,
விதைத்து வித்தகம்
புரிந்திட வைத்தவர்கள்

நேர்மைச் சுவடுகளில்
எளிமையுடைப் பயணங்களால்
இனிமைகள் நிரம்பிடும்
எம்மீன்றோரை நேசித்தலிலேயே!
பசித்தழும் பிள்ளைகளை
அன்னப்பால் ஊட்டியே
அரவணைத்து ஆளாக்கிட
மெய்வருந்தி உழைத்தவர்கள்
இல்லையென வந்தவர்க்கு
வள்ளலாய் வழங்கியவர்கள்
வல்லவனின் பாதையினிற்
பயணிக்கச் சொன்னவர்கள்
அன்னவர்கள் இந்நாளிலே
இல்லையெனினும்
எந்தன் நெஞ்சமது நிறைந்தினிக்க
நேசித்தலுடன் நினைந்து

இருகரமேந்துகின்றேன்
இறைவனிடம்
உயர்வான சுவனமதை
அவர்களுக்குப் பரிசளிக்க
வேண்டுகிறேன்
ஆற்றலுடைய அவ்வினியோர்
தமக்கான மறுமையின்
ஈடேற்றப் பிரார்த்தனைகளை
எங்களிடம் எந்நாளும்
பெற்றவாறே கபுரறையில் அவர்கள்

இன்றென் தளிர்களின்
செழிப்புக்கான தியாகங்கள்
மிகைத்தாலும், அதீதமுடை எந்தன்
நேசிப்பு
ஈன்றோரின் பக்கமே
எங்களது பக்குவமதையே
சந்ததியும் சந்திப்பர்
இருக்கும்வரையும் ஈன்றோரை
நேசித்தலுடன் எம்மக்களும்
இருந்திடல் வரமாகுமே!

**கிண்ணியா சபீனா**

# இஸ்லாம் கூறும் வாழ்வியல்

*பொறுமை இழந்து எந்த சூழ்நிலையிலும் மனம் தளர்ந்து விடாதீர்கள். எல்லாம் ஒரு காரணத்திற்காக நடந்தது என்பதை காத்திருப்பு காண்பிக்கும். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இது குறித்து அழகான ஆறுதலை நமக்கு தருகிறார்கள்.*

*ஒரு சமயம் அல்லாஹ்வுடைய தூதர் (ஸல்) சிரிக்கிறார்கள். மேலும் கூறினார்கள் : முஃமினின் நிலையை பார்த்து, முஃமினுடைய காரியத்தை பார்த்து எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. தனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டால் அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுகிறான். அந்த மகிழ்ச்சி அவனுக்கு நன்மையாக மாறிவிடுகிறது. அவனுக்கு ஒரு தீங்கு, சிரமம், துன்பம், மனதை வருத்தக் கூடிய ஒன்று நிகழ்ந்துவிட்டால் அல்லாஹ்விற்காக பொறுமையாக இருக்கிறான். எனவே, அந்த தீமையும் அவனுக்கு நன்மையாக மாறிவிடுகிறது.*

*அறிவிப்பாளர் : சுஹைப் ரலியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 5318.*

**பானு ஜிப்ரி** - சாய்ந்த மருது

## போயிங் : – 171

கோடிகள் கொடுத்து குவிந்தாலும்
நாடுமா போன சொந்தங்கள்
வாடிய மனங்களில் வடுவாகி
வானிலே நடந்த சோகத்தில்
தேடிடும் உறவுகள் கண்ணீரில்
தினமும் மூழ்கிடும் சோகங்கள்
கூடியா இறைவன் குழிப் பறித்தான்
குடும்பங்கள் வாடித்
தவிக்குதே நின்று

மகிழ்ச்சிக் களிப்பில் வானில் அரை
மணிக் கூட பறக்குமுன்னே
செக்கனில் தரையில் வீழ்ந்ததனால்
பக்கத்து உயிர்களும் பலியாகி
மொத்த உயிர்களும் முந்நூறாய்
செத்து மடிந்து உடல் கருகி
வாய்த்த சோகங்கள் சொல்லியழ
வார்த்தைகள் இல்லை வாயினிலே

கடவுளே ஏனிந்த கடுங் கொடுமை
கணவன் மனைவி பிள்ளையென
கண்ட கனவுகள் பலிக்கு முன்னே
கரைந்து போன வாழ்க்கையது.
ஆண்டவன் என்ன செய்திடுவான்
ஆக்கும் மனிதர்கள் இருக்கையிலே
மாண்டவர் மீண்டும் வருவாரோ
மானிட சோகங்கள் பலகோடி

**ராஜ்பாரதி**

# நாவ மரம் நாட்டச்சொல்லி நாட்டு வைத்தியர் கூறிருக்காராம்



மாடசாமி   பொழுதும் இருட்டிருச்சி
பட்சிகளும் பறந்திருச்சி
எங்கையா போறீக,
மேச்சலுக்கு விட்ட மாட்ட
சாய்ச்சிட்டு வரப்போரன்,
எனக்கோர் உதவி செய்வியா
உன் மாமன் மயில்சாமி
இருந்த இடத்திலே
கிடக்கிறாரு
அவருக்கு சக்கரை வியாதியாம்
இப்போ அது கூடிட்டடாம் என்று
புளியமரத்தடி கங்காணி
மூத்திரத்திலே பார்த்து சொன்னாரு
ஐயா மாடசாமி உங்கக்கா
நான் சொல்லுரன்
மாடைச் சாய்ச்சி வரும்போது
ஆத்தோரமா வேப்பமரம்
அதன் பின்னாலே ஆலமரம் பக்கத்திலே
நாவமர மொன்றிருக்கு அதில ஒரு
கை பிடி அளவு நாவப்பழம் புறக்கி வாறியா,
அதை காய வைத்து
பொடியாக்கி உம் மாமனுக்கு
சுடு நீரில் கலந்து கொடுத்தா,
பார்த்திருக்க
சக்கரை குறைந்திடுமென்று
பக்கத்து வாணி,
பட்டென்று, சொன்னாள்,
அவளுட புருசன் தான்
அந்த நாட்டு வைத்தியர்
உன்னுடன் நானும்
வந்திடுவேன், ஆனால்
நேரம் தான் ஆயிற்று

பொழுதும் தான் சாய்ந்திட்டு
நான் வீட்டில இல்லை என்றால்
வீட்டயே கொளுத்திடுவாரு
உம்மாமன் என்ன செய்ய
விளக்கும் தான் ஏற்றனும்
உலையும் போடனும்
கோழியையும் அடைக்கனும்
பாடம் படிக்கப்போன
என் புள்ள பதறிட்டு
வருவானே பசியென்று
அவனுக்கு கூழும்
காய்ச்சனுமே அதைப்
பருக்கியும் விடனும் பின்
குளிப்பாட்டியும் விடனும்
அவன் விபரமில்லா பிள்ளதானே
மூத்த பொடியன் படிச்சிருக்கான்
இப்ப பட்டணத்திற்கு
போயிருக்கான்
போலிஸ் வேலைக்கு
பயிற்சி எடுக்க,
பாருடா தம்பி
உன்மாமன் படிக்கலயே
என் வாழ்க்கைதான் பிடிக்கலே
யாரிடம் சொல்ல
சரி அக்கா உங்கணக்கு தப்பாச்சி
வாழ்க்கை புரிந்தாச்சி
அருகம்புல் புத்தி சொல்லி
அருவாளும் கேட்காது
என்பது போல
உங்கதையும் ஆயிற்று
நான் போயிற்று வாறன் வரும்போது
நாவற்பழம் புறக்கிட்டு வாரன்
இருட்டானா நாய் துரத்தும்
நீ புலம்பாத
புண்ணியமாய் போகும்

**மீராநகர் றிப்கா**

---

# திடீர் விருந்தாளிகளுக்கு திடீர் மாங்காய் ஊறுகாய்



**தேவையானவை**

சிறு துண்களாக நறுக்கிய மாங்காய் 2
வறுத்து பொடி பண்ணிய கடுகு (1/2 தே.க)
/வெந்தயம் 1/2 தே.க
உப்பு, மிளகாய்த்தூள் சுவைக்கேற்ப
சூடாக்கிய எண்ணெய் 2 மே.க

**செய்முறை**

அனைத்தையும் நறுக்கிய மாங்காய் துண்டு களுடன் கலந்து கடைசியாக சூடான எண் ணெய் ஊற்றி கலந்தால் சுவையான மாங்காய் ஊறுகாய் தயார்! (இதற்கு நல்லெண்ணெய், கடுகு எண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் பயன்படுத்தலாம்.

# நிலையானது எது?



நிலையென்றே ஏதுமுண்டோ
நிலையில்லா வாழ்வுதனில்
நிலையென்றுச் சொல்லிடவே
நிலைத்திருக்கும் நற்செயலே!
கலையென்றும் நிலைத்திடுமே
காலமெலாம் போற்றிடுமே
கலையுடனே வாழ்ந்திடவே
களிப்புடனே வாழ்ந்திடுவோம்!
தலைமைதனை ஏற்றிடுவோம்
தனித்திறனை வளர்த்திடுவோம்
தலைவனென்றே மாறிவிட்டால்
தன்னாற்றல் உயர்ந்திடுமே!
நிலையறிந்தே வாழ்ந்திடுவோம்
நீரென்றே பாய்ந்திடுவோம்
தலைசிறந்த மாந்தரினம்
தழைத்திடுமே உழைத்திடவே!

வாழ்வியல் கவி

**சா.நாகூர் பிச்சை**

துபாய்

# நம்காதல்

நீ நின்ற நிறுத்தம் எந்தன்
நினைவெல்லாம் இனிக்கும்
நீ நடந்த சாலை
என் கனவெல்லாம் நீளும்
பூவிற்கும் கடைபார்த்தால் உன்
இரட்டைசடை அழைக்கும்
புளியமர நிழல் பார்த்தால்
ஊஞ்சலாய் மனம் பறக்கும்
கடலோரம் மணல் பார்த்தால்
உன் காலடிகள் கதைக்கும்
திரையரங்கம் முழுதும்
உன் திருப்பெயரே ஒலிக்கும்
வகுப்பறைகள் நினைத்தால்
உன் வளையல் வட்டமடிக்கும்
துணிக்கடைகள் பார்த்தால்
உன் தாவணிகள் தழுவும்
மணிப்பார்க்கும் கடிகாரம்
மார்போரம் துடிக்கும்
மழைநாளின் குடைமறந்து
மனம்சேர்ந்து நனையும்
நூலகத்து நூலெல்லாம்
உன் அட்டைப்படம் தாங்கும்
காலமெனும் காலனுக்கு
நம்காதல் ஒன்றே கணக்கு
கவிதை ஒன்றே மருந்து
தீர்த்து வைக்கும் பிணக்கு
ஆலயங்கள் நுழைந்தால்
உன் அழகுமுகம் சிரிக்கும்
தாளலயம் எப்போதும்
உன் நாவினிக்கும் சொற்கள்
தவிடுபொடியானேன்
உன் தாழம்பூ மணத்தில் .

**மு.பாலசுப்பிரமணியன்**

புதுச்சேரி, இந்தியா

# கிண்ணியாவின் முதன்மையாளர்கள்

## நூல் ரசனைக் குறிப்பு

**ஏ.எஸ் சித்தி மிஸ்ரியா அமீன் - கிண்ணியா**

ஒரு சமுதாயத்தில் எழுத்தறிவு அனைவருக்கும் அவசியமாக உள்ளது. அதற்கு சுய எழுத்தாற்றலும் மேம் படுத்தப்பட்ட ஒழுக்கமும் பரந்த சிந்தனை வெளியும் அவ சியம் தேவை'

ஒரு அழகிய மாலை வேளையில் சுவையான தேனீர்க் கோப்பையுடன் அண்மையில் வெளியிடப்பட்ட சகோதரர் கிண்ணியா ஏ.ஸீ முஹம்மது முஸ்இல் அவர்களின் 'கிண்ணியாவின் முதன்மையாளர்கள்' நூலை வாசித்துக் கொண்டிருக்கிறேன்.

இந்த நூலைப் பற்றி நான் அதிகம் பேசுவதை விட இந்நூலே உங்களிடம் அதிகம் பேசும் என்ற நம்பிக்கையுடன் இந்நூலுக்கான




எனது சிறிய ஒரு ரசனைக் குறிப் பைத் தருகிறேன்.

நூலாசிரியரின் சிந்தனைகள் அனைத்தும் அதிகமாக தான் பிறந்த மண்ணைச் சுற்றிய விடயங்களை அதிகம் தன்னகத்தே கொண்டி ருக்கும் விரிந்த எண்ண அனுப வங்களை கொண்டவை போலும்.

ஏனெனில் காதலையும் கற்பனை, நிஜக் கதைகளையும் அழகிய இலக்கியங்கள் ஆக்கி விடுகின்ற எழுத்தாளர்கள் மத்தியில்... தனது பிரதேசத்தில் 'வரலாற்றுத் தடங்களை' முதன் முதலாக பதித்தவர்களை தேடியலைந்து, அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை 'வரலாற்று இலக்கியமாக்கி' வெற்றியும் கண்ட எழுத்தாளர் சகோதரர் முஸ்இல் பாராட்டப் பட வேண்டியவர்.

திருகோணமலை மாவட்ட கிண்ணியா பிரதேசத்தின் கடந்த காலக் கண்ணாடியாக பலதுறை களில் முதன்மையானவர்களை நம் கண்முன்னே கொண்டு வந்து சேர்த்திருப்பதால், யாவரும் இதனை படித்தறிந்து விளங்கிக் கொள்வது காலத்தின் கட்டாயத் தேவைதானே!

இந்த நூலை படித்துப் பாது காத்து அடுத்த தலைமுறைக்கும் சேமிக்கப்படுவதே இந்நூல் எழுதப் பட்ட நோக்கம் நிறைவேற ஏதுவாகும்.

இனி வரும் சந்ததியினர் இவற்றை அறிந்து இன்புறுவதோடு

மட்டுமல்லாது எதிர்காலத்தில் ஊரின் வரலாறுகள் பற்றிய ஆய்வினை எழுதப்போகும் எவருக்கும் இந்நூல் துணை புரிவது திண்ணம்.

நம்ம எழுத்தாளரைப் பற்றியும் சில வரிகள்..

இள வயது முதலே எழுத்துத் துறையில் ஆர்வம் கொண்ட இவர் தேசிய வார பத்திரிகைகளில் சிறுவர் பகுதியில் எழுத ஆரம்பித்து, பின்னர் பல கட்டுரைகள், கவிதைகள் என்பவற்றையும் எழுதி யுள்ளார்.

ஏழு புத்தகங்களுக்கு சொந்தக் காரரான இவர், ஆறு சிறப்பு மலர்களுக்கு' மலர் ஆசிரியராகவும்' மூன்று சஞ்சிகைகளுக்கு 'பொறுப் பாசிரியராகவும்' பணி புரிந்தி ருக்கின்றார். கிண்ணியா பிரதேச வரலாறு தொடர்பான ஆய்வு விடயங்களில் ஆர்வம் கொண்ட இவர் பல்வேறு விடயங்களை தேடி அவரது முகநூல் பக்கத்திலும் பதிவு செய்திருக்கிறார்.

இவரது இலக்கியப் பணிகள் கிண்ணியா பிரதேச செயலகத் தினால் கௌரவிக்கப்பட்டு, 'கலைஞர் சுவதம்' விருதும் பெற்று ள்ளார் என்பதும் குறிப் பிடத் தக்கது.

இந்நூல் கிழக்கு மாகாண பண் பாட்டு அலுவலகங்கள் திணைக் களத்தினால் தெரிவு செய்யப்பட்டு அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

நூலின் உள்ளே

25 முதன்மையானவர்கள் பற்றி அவர்களது விபரங்களுடன் வாழ்க்கை வரலாறுகள், வகித்த பதவிகள், மனைவி பிள்ளைகளின் பெயர்கள், அழகான புகைப்படங்களுடன் தரப் பட்டிருக்கின்றது.

முதலில் வெளியிட்ட 25 முதன்மையானவர்கள் 01 பற்றிய பெயர்களும் விவரங்களும் இதில் கடைசிப் பகுதிகளில் தரப்பட் டிருக்கின்றன.

முதலாம் பாகம் நூலில்

முதன்மையானவர்களாக இனம் காணப்பட்டு இருப்பவர்கள் இரண்டு பேரைத் தவிர மற்றவர்கள் இன்று உயிரோ டு இல்லை.

முதல் அரசியல் பிரமுகர் மர்ஹூம் எகுத்தார் ஹாஜியார் தொடங்கி, முதல் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் ஏ .ஆர் எம் அபூபக்கர், முதல் பட்டதாரி மர்ஹூம் ஏ .எல் அப்துல் மஜீத் எனத் தொடர்ந்து முதல் வங்கி முகாமையாளர் ஏ எச் முகமது யூசுப் அவர்கள் வரை 25 நபர்களின் 'தடங்களுடன்' முதல் புத்தகம் முடிவடைகிறது.

அதன் தொடராக இந்த நூலில் முதல் மௌலவி ஆசிரியர் மர்ஹூம் யாக்கூப் தொடங்கி முதல் விஞ்ஞான பாட ஆசிரியர் மர்ஹூம் ஏ.ஆர்.எம் இல்யாஸ், முதல் வெளிவாரிப் பட்டதாரி மர்ஹூம் எஸ்,எச்,எம் சரீப்,முதல் சிறைச்சாலை பாதுகாவலர் மர்ஹூம் ஜுனைதீன், முதல் ஆசிரியை திருமதி ஆர் .ஏ .சலாம், முதல் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் எனத்தொடர்ந்து, முதல் புகையிரத நிலைய அதிபர் ஐ.எஃப் பாயிஸ் வரை 25 முதன்மையானவர்களின் விபரங்கள் மிக மிக அழகாக தரப் பட்டிருக்கின்றன.

இவ்வாறு முதன்மையானவர்க

ளின் விவரங்களை நாம் தெளிவாக வாசித்து அறிந்து கொள்ளக் கூடிய தாக எளிய மொழி நடையில் இந் நூலை யாத்திருக்கிறார் நூலாசிரியர் சகோதரர் முஸ்இல்.

இந்நூலை அவர் வீட்டுக்கு எனது தாயார், (முதல் ஆசிரியை ரைஹானா சலாம்) சகோதரி (எழுத்தாளர் பாயிஸா அலி) சகிதம் சென்று இருந்த சமயம் எனக்காக அன்போடு வழங்கிய போது, இந்த நூலை உருவாக்க நீங்கள் எடுத்த முயற்சியில் உங்கள் அனுபவம் எப்படி இருந்தது என கேட்டேன்.

நூலாசிரியர் தந்த பதிலில் சற்று அயர்ந்து தான் போனேன்.

முதன்மையானவர்களுள் பலர் இப்போது உயிரோடு இல்லை. சிலர் இருக்கின்றனர். விபரங்களை தருவதற்கு சம்பந்தப்பட்டவர்களின் உறவுகளை நாடிய போது, உடனே தருவதற்கு யாரும் முன்வரவில்லை, மிகக் கடின முயற்சியின் பயனாகவே இத்தகவல்கள் அனைத்தும் திரட்டப் பட்டன என சோர்வுடன் நூலா சிரியர் பதிலளித்த போது மிகவும் கவலையாக இருந்தது.

காலத்தால் அழியாத வரலாற்று ஆவணமாக தங்களது உறவுகளின் 'தடங்கள்' பதிக்கப்பட்டிருக்கும் உன்னதத்தை புரிந்து கொள்ளாத சந்ததிகள், காலங்கள் கடந்து வரலாறு பேசும் போது இந்நூலையும், நூலாசிரியர் சகோதரர் முஹம்மட் முஸ்இல் அவர்களின் முயற்சியையும் நிச்சயமாகப் புரிந்து கொள்வார்கள் . பாராட் டவும் செய்வார்கள்.

எனது தாயார், குடும்ப உறவுகள் என பல முதன்மையாளர்களின் தடங்கள் இங்கு பதியப் பட்டிருக்கின்றன.

எங்களது புத்தக அலுமாரிகளில் சேமிக்கப்பட வேண்டிய அற்புத மான ஒரு நூல் எனவே இதை நான் கருதுகின்றேன்.

இவ்வளவு பெறுமதி மிக்க நூலை உருவாக்கிய சகோதரர் எழுத்தாளர் முஸ்இல் அவர்கள் நோய் நொடிகள் இன்றி, நீண்ட ஆயுளுடன் மேலும் பல அழகிய இலக்கியங்கள் படைக்க பிரார்த் தித்து வாழ்த்துவோம்.

# மட்டுமல்ல

நீ உடுத்திருந்தது
ரோஜா நிற
ஆடையை மட்டுமல்ல...

உனக்கு வெளியே
பெய்த மழையில்
நனைந்து கொண்டிருந்தது
குடை மட்டுமல்ல...

உன் கையில்
சிக்குண்டிருந்தது
குவளை மட்டுமல்ல...

இறுதியாக நீ பருகிக்
கொண்டிருந்ததும்
தேநீரை மட்டுமல்ல...

**நேசமுடன் ஈசு**

# அறிந்திடு

மருதூர் ஜமால்தீன்

ஆடிடும் வாழ்க்கையின்று
அமைதியும் சென்றதெங்கு
ஓடிடும் காலம் முன்னே
ஓய்வினைத்தேடியுள்ளம்
வாடியே அலைந்துமென்ன

வதைகளேயெங்கும் சூழ்ந்து
தேடிடும் ஓய்வு வேண்டி
தேய்ந்ததே ஆயுளிங்கு

எத்தனை செல்வமிங்கு
எம்மினைச்சூழ்ந்தும் நல்ல
புத்தியில் ஈனமற்றுப்
புரிந்திடும் செயலால் தீதே

இத்தரை படிந்துவுள்ளம்
இறுகிய மனிதனாகி
சித்தமே கலங்கித்தூய
சிறப்பினையழிக்கின்றார்
இப்படி வாழுயென்று
இனியநல் வேதமிங்கு
செப்பமாய்ச் சொன்னபோதும்
செவியினிலேற்கா தீமை

தப்பினைத்தொடர்ந்து தன்
தரத்தினையிழந்துடலின்
ஒப்பிலாவுயிரை மாய்க்க
உழைத்திடுமுயிரா நீயும்?



## செவ்வியல் எழுத்துக்களால் வாழ்வியலை வரையும் 'அரும்பு ' புகழ் ஆசிரியர்.

# ஹாபிஸ் இஸ்ஸதீன்



### எழுதும் கலை.........................................................

தன்னை ஓர் ஆசிரியராக அறிமுகப்படுத்திக் கொள்ளும் திரு ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்கள் பல்வேறுபட்ட திறமைகளோடு பயணிக்கும் ஒரு சிறந்த எழுத்தாளர் ஆவார்.

தற்போது முகநூலில் இவரது பதிவுகள் நூற்றுக் கணக்கான வாசகர்களால் விரும்பி வாசிக்கப்பட்டு வருவதோடு இவருக் கென்றே ஒரு வாசகர் கூட்டமும் காணப் படுகின்றது.

வாசகர்களின் உள்ளம் கவரும் விதத்தில் தான் சொல்ல வந்த விட யத்தைச் சொல்லும் பாங்கு இவரது தனித் திறமையாகும்.

### வாழ்வியலும் பணியும்...................

1952ம் ஆண்டு பிறந்த இவர், தர்கா நகர் ஸாஹிராக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் தனது கல்வியைப் பூர்த்தி செய்து கொண்டார்.

உயிரியல் விஞ்ஞானத் துறையில் க.பொ.த. உயர் தரக் கல்வியை நிறைவு செய்த பின் ரத்மலானை விமான நிலையத்தில் எயார் ஸிலோன் விமான சேவையின் பொறியியல் பிரிவில் தனது முதலாவது தொழிலுக்காக இணைந்து கொண்ட போது அவருக்கு வயது 19. பின்னர் 1971ம் ஆண்டு ஆசிரியர் சேவையில்

இணைந்த அவர், துந்துவை முஸ்லிம் வித்தியாலத்தில் தனது முதல் நியமனத்தைப் பெற்றுக் கொண்டார்.

1972ம் ஆண்டு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அனுமதி பெற்று, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக இரு வருடக் கற்கையைப் பூர்த்தி செய்து வெளியேறினார்.

1974ம் ஆண்டு வெலிகம அறபா மகாவித்தியாலத்தில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிய ஹாபிஸ் இஸ்ஸதீன் அவர்கள் 1980ம் ஆண்டு தென் மாகாண விஞ்ஞான ஆசிரிய ஆலோசகராக நியமனம் பெற்றார். அதன்பின்னர் 1983 முதல் 1992 வரை அழுத்கம ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய அவர் 1990ம் ஆண்டு இடம் பெற்ற இலங்கை அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சை யிலும், இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட் சையிலும் நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுள் ஆகக்கூடிய புள்ளி களைப் பெற்றுத் தெரிவானார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிபராகச் சிறிது காலம் பணியாற்றிய பின் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக 41 வயதிலேயே அரச சேவையிலிருந்து ஒய்வு பெற்றுக் கொண்டார். பின்னர் ஒரு காலத்தில் தர்கா நகரில் உருவாக்கப்பட்ட அலிஃப் சர்வதேச பாடசாலையின் ஸ்தாபக அதிப ராகவும் அவர் சில வருடங்கள் பணி புரிந்தார்.

## ஊடகத்துறையில்........................

ஆசிரியராக, ஆசிரிய ஆலோச கராக, அதிபராக மட்டுமின்றி இவர் இலங்கைப் பாராளுமன்றத்தில் உரை பெயர்ப்பாளராகவும், 'டெய்லிமிரர்', 'டைம்ஸ்' பத்திரிகைகளின் பெந்தோட் டைப் பிரதேச நிருபராகவும் மற்றும் 'தி ஐலண்ட்' பத்திரிகையின் மாத்தறைப் பிரதேச நிருபராகவும் கடமையாற்றியி ருக்கின்றார்.

## இயற்கையை இரசிக்கும் கலைஞராக ................................

கல்வித்துறையோடு மட்டு மன்றி புகைப்படக்கலை, ஒவி





அவர் எடுத்துள்ள புகைப்படங்கள்

யக்கலை என்பவற்றிலும் ஆர்வமும் ஆற்றலுமுள்ள ஒருவராக இவர் திகழ்கின்றார். இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இவரது புகைப்படங்கள் flicker எனும் இணையதளத்தில் பதிவேற்றப் பட்டிருக்கின்றன. www.flickr.com/photos/yimhafiz எனும் லின்க் இன் மூலம் அவற்றைப் பார்த்து இரசிக்கலாம். இவரது புகைப்படக்கருவிக்குள் சிக்கிய சில புகைப்படங்கள் வெளிநாட்டு சஞ்சிகைகளிலும், பாடசாலைப் பாடநூல்களிலும் விக்கிபீடியா போன்ற இணையதளங்களிலும் இணைக்கப்பட்டுள்ளன என்பதும் மகிழ்ச்சிக்குரிய தகவலாகும்.

## மொழிபெயர்ப்புத்துறையில் தடம்.

மொழிபெயர்ப்புத் துறையிலும் இவரது வகிபாகம் மெச்சத்தக்கது. ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும். சிங்களத்தில் இருந்து தமிழுக்கும் பல நூல்களை வெகு சிறப்பாக மொழி பெயர்த் துள்ளார்.

இவரது மொழிபெயர்ப்பு நூல்கள் பின்வருமாறு..

- **முஸ்லிம் இளைஞர்களுக்கான தலைமைத்துவ வழிகாட்டி**
- **பெற்றார் பிள்ளை உறவுகள்**
- **முஸ்லிம் சிந்தை**
- **எளிதிலும் எளிது**
- **இருகடல்கள் சந்திக்கும் போது**
- **அத தருவா**
- **ஆயிஷா**
- **ஓர் இளம் ஆசிரியை**
- **ஒரு பெண்பிள்ளை**
- **மலரும் பிள்ளைகள்**
- **அப்பால்**
- **பர்மிய மரபுக் கதைகள்**
- **குறும்புக்கார பாட்டியம்மா**
- **காட்டுக்குப் போன நத்தை**
- **விஞ்ஞானத்தினதும் மனித மூளையினதும் மர்மங்கள்.**

## இலக்கிய விருது...............................

இவர் மொழிபெயர்ப்பு செய்த நூலான 'ஓர் இளம் ஆசிரியை' என்ற நூலுக்கு 2024ம் ஆண்டின் அரச இலக்கிய விருது கிடைக்கப் பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.



## அரும்பு சஞ்சிகை ஆசிரியர் மற்றும் நூலாசிரியராக...................................


ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆசிரியரைப் பற்றிப் பேசும் போது 'அரும்பு' சஞ்சிகையைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க முடியாது

1997 முதல் 2017ம் ஆண்டுக் காலப் பகுதி வரை மொத்தம் 44 'அரும்பு' இதழ்கள் வெளி வந்திருக்கின்றன.


மாணவர்களினதும் வாசிப்பை நேசிப்போரினதும் பேரன்பையும் அபிமானத்தையும் பெற்ற சஞ்சிகையாக அரும்பு சஞ்சிகை காணப் பட்டதுடன் இன்றளவிலும் அதன் நாமம் வாசகர்களிடம் நிலைத்திருக்கின்றது. அரும்பின்


# இவர் மொழிபெயர்த்துள்ள நூல்கள்












அத்தனை இதழ்களிலும் வெளிவந்த அனைத்து ஆக்கங்களையும் எழுதியது மட்டுமன்றி, அவற்றின் டைப் செட்டிங் மற்றும் அட்டை வடிவமைப்பு என்பனவற்றை ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆசிரியர் அவர்களே செய்திருக்கின்றார் என்பதும் சுட்டிக் காட்டப்பட வேண்டியதாகும்.

மகளிர் சுகாதாரப் பிரச்சினைகள் எனும் நூலை 2020ம் ஆண்டு வெளியிட்டார். பெண்கள் எதிர்நோக்கும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தெளிவாக விளக்கும் இந்நூல் ஒரு சிறந்த விழிப்புணர்வும் தெளிவும் வழங்கும் நூலாகக் காணப்படுகின்றது. இந்நூலை அடுத்து, நீண்ட இடைவெளியின் பின்னர் 2025ம் ஆண்டு பெப்ரவரி

## இவை அவர் நடத்தின அரும்பு சஞ்சிகை




மாதத்தில் 'நீங்காத நினைவுகள்' என்ற பெயரில் தன்னுடைய வாழ்வியல் அனுபவங்களை ஏந்திய நூலை வெளியிட்டார். இந்நூலில் ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆசிரியர் அவர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களைப் பதிவேற்றியுள்ளார். அவர் எதிர் கொண்ட சவால்கள் மற்றும் இன்ப துன்பங்களுடனான வாழ்க்கையின் யதார்த்தத்தை இந்நூல் செம்மையாகச் சித்தரிக்கின்றது. இந்நூலானது வாசகர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றதோடு, வெளியிட்டு சில மாதங்களிலேயே அத்தனைப் பிரதிகளும் விற்றுத் தீர்ந்தன.

### மருத்துவத்துறையில் பரிணாமம் ....


மருத்துவத்துறையிலும் இவரது இன்னொரு முகம் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றது. ஆம். இவரது இரண்டாவது புதல்வன் **DMD** நோயினால் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் அந்நோய் பற்றிய அவரது அனுபவங்களும் அவர் தேடித்தெரிந்து கொண்ட தகவல்களும் காரணமாக சர்வதேச மட்டத்தில் இடம்பெற்ற **DMD** சம்பந்தமான மாநாடுகளில் பங்கேற்கும் வாய்ப்பும் ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆசிரியர் அவர்களுக்கு வாய்த்திருக்கின்றது. ஐக்கிய அமெரிக்கா, கிரேக்கம், நெதர்லாந்து,

# அவர் எழுதியுள்ள நூல்கள்










இந்தியா மற்றும் நேபாளம் போன்ற நாடுகளில் இடம் பெற்ற **DMD** மாநாடு களில் இவர் கலந்து கொண்டுள்ளார். அத்தோடு உலக **DMD** அமைப்பின் உறுப்பினராகவும், இலங்கை புற்று நோய் சங்கத்தின் ஆயுள்கால உறுப்பி னராகவும் இருப்பதோடு அகில இலங்கை சமாதான நீதவான் ஆகவும் பணி புரிகின்றார்.

இவை தவிரவும் பல பயனுள்ள மருத்துவக் கட்டுரைகள், அறிவு ரைகள் விழிப்புணர்வுப் பதி வுகளை தொடர்ச்சியாக முகநூலில் எழுதி தன்னலமில்லாத சமூகப் பணியாற்றி வருகின்றார்.

எழுத்தோடு பல்கலையும் வர மாகக் கிடைக்கப் பெற்ற பன்னூ லாசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் ஆசிரியர் அவர்கள் சமூகப் பற்றோடு இயங்கும் ஒருவர் ஆவார். ஆராவாரமில்லாமல் அமைதியாகத் தன்னால் இயன்ற சமூகப்பணிகளை இவர் ஆற்றி வருகிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## சமூகத்தின் சொத்து......................

இத்தகைய ஒரு தகைமை மிக்க ஆளுமையை அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி.

அல்லாஹ் அன்னாருக்கு நல்லா ரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொடுக்க வேண்டுமெனவும் சமூகத் திற்கான அவது பணிகள் தொடர்ந் திருக்க வேண்டும் எனவும் பிரார்த் திப்பதோடு முத்தமிழ் கலசம் சார்பாகவும் வாழ்த்துகளைத் தெரி விக்கிறேன்.

தகவல்-
**மக்கொனையூராள்.**





## ஓர் இளம் ஆசிரியை நூலுக்கான சாகித்திய விருது



## வரைந்த ஓவியங்கள்







# COST OF LIVING
# SRI LANKA

| | | Jan 2022 | | Nov 2024 |
|---|---|---|---|---|
| Coconut (Avg.) | Rs./Nut | 85.00 | Rs./Nut | 165.00 |
| Coconut oil | Rs./Ltr | 648.00 | Rs./Ltr | 741.00 |
| Sugar (White) | Rs./kg | 138.00 | Rs./kg | 260.00 |
| Egg (White) | Rs./Each | 21.00 | Rs./Each | 35.00 |

*Source: Central Bank, Sri Lanka*

**If you had Rs. 100 in 2022, you could have purchased 1 coconut. How many can you purchase with Rs. 100 now?**

**If this is the fate of a simple household item, what about larger expenses?**

*Education* **Home purchase** *Weddings* *Surgeries*

**Does your savings plan consider inflation?**

*Retirement* *Vehicle purchase* *Debt reduction*

Investment plans starting from Rs. 6,000 per month.
0% interest installments from all leading banks.






**LETS CHAT NOW**

+94776029933
nuhamilan.o@gmail.com

**NUHA MILAN**

*Licensed Wealth Planner, Sri Lanka*
(RG146 compliant, Australia)